ஒளி - 05 கதிர் - 01 2026 - ஜனவரி - மார்ச்

# அவரி - 17




## கலை இலக்கிய முத்திங்கள் இதழ்

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப் வெளியீடு

40 Years of Excellence 1983 - 2023

Flora®

*Unmatched quality for 40 years*




SLS 798 SLS 1338 SLS 1339 SLS 1340

**PEE BEE MANAGEMENT SERVICES (PVT) LTD**

**35, UDA Industrial Estate, Katuwana Road, Homagama, Sri Lanka.**

**Tel: 011-2855492, 011-2892031-2 Fax: 011-2892033**

**Email: peebeemanagement@peebeegroup.com**

SHOP ONLINE **www.floratissues.com** +9477 200 1441

# அவிரி 17

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான SRI LANKA PEN CLUB
முத்திங்கள் வெளியீடு


**ஒளி : 05 கதிர் : 01 2026 – ஜனவரி – மார்ச்**


அவரி ஆசிரியர் குழு.

நிர்வாக ஆசிரியர்
சம்மாந்துறை மஷூறா **JP**

இதழாசிரியர்.
பஸ்லா பர்ஸான்
காத்தான்குடி

## சஞ்சிகை செயற்குழு

ஷாமென் நிஸாம்டீன்.
கட்டுகஸ்தோட்டை.

சுஸானா முனாஸ்
மூதூர்

அஸ்மா தீன்.
கம்பளை

மஹீஸா பானு ஜஸூர்
சம்மாந்துறை

மர்ளியா சக்காப்
திருகோணமலை

ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி

லரீபா பதுர்தீன்
கலேவல

சித்தி ஜெஸீனா நிஸ்றீன்
சாய்ந்தமருது

பாரா தாஹிர்
மாவனெல்லை

மிஸ்ரியா அமீன்
கிண்ணியா

றம்ஸானா ஸமீல்
அக்கரைப்பற்று

நௌஷா ஜமால்தீன்
சம்மாந்துறை

பானு ஜிப்ரி
சாய்ந்தமருது

முபீதா அமீன்
அக்கரைப்பற்று

சில்மியா சாப்தீன்
கண்டி

பர்வீன் அப்துல் காதர்
மருதமுனை

நிர்வாக அலுவலகம்


மஷூறா மஹால் 4/C/5/லேக் வீதி, மருதமுனை 04 (32314)
**0765363434 / 0770696559 / 0672261044**


**ISSN: 2961-5194**

## தூரநோக்கு

கலாசாரத்தினூடாக கலையிலக்கியங்களைக் கட்டியெழுப்புவதும் ஆற்றலுள்ள பெண்களை ஆற்றலுலகில் சஞ்சரிக்கச் செய்வதும்

## நோக்கக் கூற்று

முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் களங்கள் அமைத்து அவர்தம் ஆற்றல்களை மேம்படுத்தல்

# SRI LANKA PEN CLUB கீதம்

ஆற்றலும் அறிவும் ஆளுமைச் செறிவும்
அனைத்துயர் பெண்களே நாங்கள்
Sri Lanka Pen Club ///

பொறுமையில் பூமி கருணையில் மாரி
கருவினில் திருவை சுமந்திடும் மாதா....
வெறுமையில் கூட செழுமையாய் நேசம்
வளர்த்திடும் ஜீவன் சுமைதாங்கி.....

கலைகளும் செய்வோம் சமையலும் செய்வோம்
கரங்களில் எழுதுகோல் உண்டு....
சிலைகளாய் எம்மை எண்ணிடும் கூட்ட
சிந்தனைக் கிளர்வில் தளைப்போம்.....

உலகம் எங்கும் துயருறும் நாங்கள்
உயிர்த்திடும் பீனிக்ஸ் பறவை....
கலாசார மீறல்களற்ற தோருயர்வில்
களித்திடும் இலக்கில் நிறைவோம்.....

அகமெனும் கடலின் கரையே விழியாய்
ஆனதெம் வாழ்வு உலகில்....
சிதைந்திடும் போதும் ஒருதுளி மழையில்
தளைத்திடும் புல்லென நிமிர்வோம்....!!!

- பாடலாக்கம்:- சம்மாந்துறை மஷூறா

# நிர்வாக ஆசிரியரின் செய்தி.



## இலக்கியவித்தகர்,
## கலாபூஷணம் சம்மாந்துறை மஷூறா JP

அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

ஐந்தாவது ஆண்டின் முதலாவது இதழில் உங்களைச் சந்திப்பதையிட்டு பேருவகையடைகிறேன். எமது SRI LANKA PEN CLUB இன் அயராத முயற்சியான அவரி ,எமது அங்கத்தவர்களுக்கு களம் தரும் முயற்சியாகவே ஆரம்பிக்கப் பட்டது. அதன் காரணமாக சிறந்த படைப்பாளிகளை வெளிக் கொணர்ந்திருக்கிறோம். விசேடமாக சிறுகதையாசிரியர்களை உருவாக்கியுள்ளோம். சிறுகதை எழுதுவோர் குறைவு. எனினும் இன்று பென்கிளப்பைப் பயன் படுத்திக்கொண்டு பறந்துவிட்ட பட்சிகளைத் தவிர, இருபதுக்கும் மேற்பட்ட சிறுகதையாசிரியர்களிருக்கிறார்கள். விரைவில் அவர்களை முதன்மைப்படுத்தும் முயற்சியினையும் முன்னெடுக்கவுள்ளோம்.

முஸ்லிம் பெண்களின் படைப் புலகம், ஏனைய சமூகப் பெண்களின் படைப்புலகிலிருந்து வேறுபட்டது. கலாசாரமும் ஆற்றலும் கத்தியின் இரு முனைகள்போல கையாள வேண்டிய தேவை இவர்களுக்குள்ளது. அதனை எமது படைப்பாளர்களும் உணர்ந்தே இருக்கிறார்கள். ஒரு படைப்பாளிக்கான அங்கீகாரம் கலாசாரத்தோடிணைந்த சமூகப் பொருத்தப்பாட்டினைச் சார்ந்தே நிற்கிறது.

அமைப்பிற்கு வெளியிலுள்ள அனைத்து பெண்களுக்கும் களம் கொடுக்கும் ஒரு சஞ்சிகையாக, கடந்த ஆண்டே அவரியை பிரகடனப் படுத்தியிருந்தோம். எனவே பெண் படைப்பாளிகள் யாரும் எழுதலாம். எந்த மதத்தினரும் எழுதலாம். சஞ்சிகையாக்க முயற்சியின் அனுபவத்தைப் பெற்று பிற்காலத்தில் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு பயிற்சிப்பட்டறையாக, அவரி ஆசிரியர்களாக ஒவ்வொரு இதழிலும் வெவ்வேறு பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. அதன் நிமித்தம் இவ்விதழின் ஆசிரியை காத்தான்குடி பஸ்லா பர்ஸான் இலைமறை காயாக இருந்த இவர் எமதமைப்பினால் பட்டை தீட்டப்பட்டு பிரகாசிக்கிறார். இலக்கியத்தின் அத்தனை பிரிவுகளிலும் கால் பதித்து விட எத்தனிக்கும் ஒரு தீவிர படைப்பாளி. எதையும் சீக்கிரம் கிரகித்து வெளிப்படுத்தும் கற்பூர மூளைக்குரியவர். ஒவ்வொருவருக்கும் சஞ்சிகையாசிரியர் அனுபவம் முதல் அனுபவமாக இருப்பினும் திறம்படவே இயங்குகிறார்கள். பின்னொரு காலத்தில் பஸ்லா சிறந்த பத்திரிகையாளராகக் கூட வரக்கூடும். அதற்காகத் தானே இந்த வழிகாட்டல்களும். அவரியோடு தொடர்பிலிருங்கள்.

# இதழ் ஆசிரியர் உரை

## பஸ்லா பர்ஸான் – காத்தான்குடி



ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Srilanka Pen Club இனால் முத்திங்கள் இதழாக வெளியீடு செய்யப்படும் அவரி 17 வது இதழின் ஆசிரியராகப் பணியாற்றியதில் அகமகிழ்கிறேன்.

பெண்களை முன்னிலைப் படுத்தி அவர் களது துறைசார் படைப் பாற்றலுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காகவும் அவற்றை விருத்தி செய்வதற்காகவும் அவற்றின் மூலம் சமூகத்துக்குத் தேவையான அறிவு சார்ந்த, ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துகின்ற, சிறந்த மனப்பாங்குகளை விருத்தி செய்யத்தக்க வகையில் இவ் அவரி இதழை வடிவமைத்தமையையிட்டு உணர்வுபூர் வமாக உவகை கொள்கி றேன். இதன் மூலம் Srilanka Pen Club உட்பட பெண் எழுத்தாளர்களின் எழுத் தாற்றலுக்கு வளம் சேர்ப்பதில் நானும் பங்குகொண்டதையிட்டு மன நிறைவ டைகிறேன். இதுதவிர வேறு பத்திரிகை களிலும் எமதமைப்பினரின் ஆக்கங் கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன என் பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகு பணிகளை எனைத்தொடர்ந்து வருபவர்களும் சிறப்பாக எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நெகிழ்ச்சியான இத்தருணத்தில் Srilanka Pen Club எனும் கட்டமைப்புக் குள் எனை அங்கத்தவராக இணைத் தது முதல் அவரி 17 இதழின் ஆசி ரியராக ஆக்கியது வரை ஒவ்வொரு நிலையிலும் ஒரு தாய்போல் அனைத்து விடயங்களிலும் தக்க ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிய எமதமைப்பின் ஸ்தாபகத் தலைவியும் அவரி நிர்வாக ஆசிரியருமான கலாபூ ஷணம் மஷூறா சுஹூறுத்தீன் அவர்க ளையும் ஆக்கங்கள் சேகரிப்பில் அக்க றையுடன் செயற்பட்டுத் துணை நின்ற எமதமைப்பின் பொது இணைப்பாளரும் அவரி நிர்வாக உறுப்பினருமான ஷாமன் நிஸாம்டீன் அவர்களையும் ஏனைய நிர்வாக உறுப்பினர்களையும் சிறப்புமிக்க ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைத்த அனைத்துப் படைப் பாளிகளையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து இத்தகு சிறப்பான தருணங் களை எனக்கு நாடித்தந்த ஏக இறை வனை நெஞ்சாரப் புகழ்ந்து விடை பெறுகிறேன்.

# அவரி 17
# படைப்பாளிகள்.

கவிதைகள் - வாழ்க்கை
ஜெஸீனா நிஸ்றீன்.

வீழாத மரம்.
மும்தாஜ் பேகம் ஹமீட்

மரித்தாள் மீண்டும் உயிர்த்தாள்.
சம்மாந்துறை மஷூறா.

மீண்டும் எழுவோம்.
ஷினாஸ் "காகிதம்" அநாமிகா.

கண்மணி நாயகம் புகழ்.
றுசைனா ஹாசீம்

ஒன்ன நெனச்சி நாளும் வாடுறேன்.
பானு ஜிப்ரி.

கடந்த பயணமும் பூக்கும் புது வரவும்.
ஏ.ஆர்.எச்.நஸ்மியா.

சுதந்திர இலங்கை
பஸ்லா பர்ஸான்

கல்வியே கண்கண்ட தெய்வம்
ஐ பாத்திமா சுமையா

சிறுகதைகள் - பனித்துளிகள்
எஸ்.பாயிஸா அலி

நெஞ்சோரமாய்
ஷாமென் நிஸாம்டீன்.

பனிமலர்கள் - மிஸ்ரியா அமீன்.

கட்டுரைகள்.
போதைப்பொருள் துஷ்பிரயோகத்துக்
குள்ளான இளம் சந்ததிகளை
மீட்டெடுப்போம்...
ஹாஜறா கலீலுர் ரஹ்மான்.

இரவு ஆடைகளைத் தயாரித்துக்கொள்ளல்.
சில்மியா ஷாப்டீன்.

தெழில்நுட்பம் - ஹகீமா அமீனுதீன்

ஞானப்பற்கள்.
Dr பர்வீன் அப்துல் காதர்.

போதைப்பொருள் தடுப்பு
நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு
வழங்குவோம் - ஜெனிதா மோகன்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்
எதிர்கொள்ளும் சவால்கள்.
ஏ.எம்.கஸ்பியா பீவீ

மொழிபெயர்ப்புக் கவிதைகள்.
ஆங்கிலத்தில்
கலாநிதி மரீனா இல்யாஸ் ஷா.ஃ.பீ.
தமிழில் மன்னித்து விடுங்கள் வாப்பா
பஹ்மியா ஷரீப்.

நான் - ஜெஸ்மின் றமீஸ்

சமையல் - நௌஷா ஜமால்தீன்

செவ்வி. விருந்தினர்
கலாபூஷணம் மஷூறா சுஹூறுத்தீன்
நேர்காணல் - ஷாமென் நிஸாம்டீன்.

அலசல்
சமூகச் சித்திரம் - ஜெஸ்மின் றமீஸ்.

சிறுகதைத் தொகுதி ரசனைக் குறிப்பு.
மருதூர் ஜமால்தீனின்
திருப்பம் - மிஸ்றியா அமீன்.

உணவே மருந்து - ஜெஸ்மின் யூசுப்

கைவண்ணங்கள் - சுசானா முனாஸ்

அவரி செய்திகள்.

கண்கள் திறந்தன - சிறுகதை
திருமலை மர்ளியா.

# வாழ்க்கை



வளர்த்துவிட்ட
சின்னஞ்சிறு அரும்பு
காலத்தின் கரங்களில்
பெருமரமாய் நின்றது

வேர்கள் இங்கே இருந்தும்,
வானம் தேடி
தொழில் என்ற பெயரில்
தொலைவான நாட்டிற்குப்
பிரிய முடியாமல்
பிரிந்தது

என்ன வாழ்க்கை?
என்ன உலகம்?
வாழத்தான் வந்தோம்
ஆனால்...
ஒன்றாய் வாழ
விதி அனுமதிக்கவில்லையே!

காலத்தின் கோலம்,
கவலையின் உச்சம்,
பிரிவுத் துயர்...
பிளவு கண்ணீராக
இதயத்தைத் துளைக்கிறது.

எண்ணியே பார்த்தேனா?
இல்லை
எள்ளளவும் முடியவில்லை
எனக்கே அது
சாத்தியமாய்த் தோன்றவில்லை

வாடிய மலராய்
வதனம் குன்றி,
வாஞ்சையுடன்
விடைபெற்ற அந்த நொடி,
என்னால்
தாங்க இயலவில்லை

ஆனால்
தாங்கித்தான் ஆக வேண்டும்
ஏனெனில்,
இது முடிவல்ல
வருங்காலம்
மலராய்ச் சிரிக்கும்
என்ற நம்பிக்கை இருக்கிறது

பிரிவின் வலியும்
பயணத்தின் பொருளாகி,
இன்றைய கண்ணீர்
நாளைய
வெற்றிக்கான விதையாய்
மாறும்

அதுதான் வாழ்க்கை
வீழ்ந்தாலும் நிமிரும்,
வலித்தாலும்
வழி காட்டும்
வாழ்க்கை!

**ஜெஸீனா நிஸ்றீன்.**
**சாய்ந்தமருது.**

# வீழாத மரம்

விதவையின்
தீராத வலிக்கு
வானும்தான் சாட்சி,
கணவனை இழந்தது
அவள் செய்த பாவமல்ல.

அவள் கண்ணிறைந்த கண்ணீரை
உலகம் காணாது,
கண்ணாடி போல
உடைந்த உள்ளம்
யாருக்கும் புரியாது.

வாழ்க்கை முழுதும்
போராடி நிற்கும்,
அவள் நெஞ்சம் மட்டும்
தாங்காத துயரத்தையும்
நீங்காத பாரத்தையும்
சுமந்து கொண்டே இருக்கும்.

விதி செய்த சதியால்
தானே தனிமையில் தள்ளப்பட்டு,
தனித்து நிற்கும் அவளை
வதைக்கலாமா?

கணவனை இழந்த திண்டாட்டம்
கல்லாய் மார்பில் படர,
அவள் மனதை நோகச்செய்து
அவளை அல்ல
தங்களின் அறியாமையை,
தங்களின் கருணையற்ற
இதயத்தை
பறைசாற்றுகிறார்கள்.

விதி ஒரு வீழ்ச்சி செய்தால்,
அவள் வாழவே கூடாதா?
அவள் தவறு செய்யாதவள்,
போதுமே
தனிமை என்ற தண்டனை
அவளுக்கு
எவரும் கேட்க மாட்டார்கள்
நீ எப்படி இருக்கிறாய் என்று...
ஆனாலும் சொல்லத்
தயங்க மாட்டார்கள்,
அவள் இப்படித்தான் என்று!

விதவை என்பது
ஒரு வசைமொழியல்ல.
தனித்தும்
வீழாது நிற்கும்
ஒரு வீரத்தின் பெயர்.

அவள்மேல் கல் எறிவோரின்
இதயம் மண்ணாகி விட்டது,
அவள் மட்டும்
இன்னும் மனிதமாய் இருக்கிறாள்.



**மும்தாஜ் பேகம் ஹமீட் – ஒலுவில்.**

# பனித்துளிகள்



எஸ்.பாயிஸா அலி

அவிரியின் சிறுகதை

2.10 க்கு விரல் ஒப்பமிட்டுப் பாடசாலை கேற்றடிக்கு வந்தும் பத்து நிமிடம் கடந்து விட்டிருந்தது. இடப்பக்கமாய் வளைந்து நீண்டு கிடக்கும் கிண்ணியாப் பாலத்தையும் வலப்பக்கமாய்த் தெம்பிலியும் வாழைக்குலைகளுமாய்ப் பளபளக்கும் நூர்தீன் நானாவின் பழக்கடையையும் இன்னும் எத்தனை தடவைகள்தான் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருப்பது.

எல்லா ரக வாகனங்களும் சர்ர்சர்ரென விரையும் இந்த மட்டக்களப்பு வீதியில் எனதருமைக் கணவனாரின் பைக்கை மட்டும் இன்னமும் காணோமே....

பாவம் அவரும் என்னதான் செய்வார்.அந்தப் பாதிமெண்டல் 1.30 க்கு ஸ்டாப்மீட்டிங் போட்டிருக்கும். நல்லவேளையாக சின்னவள் பீரியட் வயிற்றுவலியென்று ஸ்கூல் போகல. இல்லாட்டி இப்ப அவளும் கூடத்தான் ரோட்டில் காய்ந்துகொண்டிருப்பாள்.

இவருக்கு மறுபடியும் கோல் பண்ணுவோமா என நினைத்துப் போனைக் கையில் எடுத்தாலும் தேவையில்லாம திரும்பத்திரும்ப சங்கடப்படுத்த வேணாமே என ஹேண்ட்பேகினுள் திணிக்கிறேன்.

மீதமாய் என்னோடு ஒட்டிக் கொண்டிருந்த நாலைந்து சீருடைச் சிட்டுக்களும் ஒவ்வொன்றாய்... அவரவர் ஓட்டோக்களிலும் பெற்றவர்களுடனுமாய் கிளம்பிக் கொண்டிருக்க...

என்ன ரீச்சர்.... சேர் இன்னும் ஏத்துறதுக்கு வரலையா..." என்றபடி கேற்றை மூடி நடக்கத் தொடங்கி விட்டாள் எங்க அலுவலகி சுஜானாவும். இப்போது எஞ்சி இருந்தது நானும் நதாவும் மட்டுமே.

"என்ன புள்ளே.. ஓட்டோ வரலையா என்கிறேன். கையில் இருந்த சிறிய குச்சியினால் கேற்றை மெதுமெதுவாய்த் தட்டியபடியே ஆழ்ந்த யோசனையில் இருந்தவள் சிலிர்த்தபடியாய் "இன்னமும் காணலையே" ரீச்சர் என்றாள்.

"நாம கிளம்ப முதல் இவள வழியனுப்பியாகணுமே" என்ற புதிய ஆதங்கம் இப்போதெனக்கு.

இல்லாட்டி பாவம் என்னவர்,

"இப்படியான தனிமைப்பட்ட சூழலில் எப்படி இந்த வளர்ந்த பிள்ளையைத் தனியே விட்டுட்டு நாம வீட்ட போற என்று என்னோடு காத்திருக்கத் தொடங்கிடுவார். ரெண்டு பெண் பிள்ளைகளைப் பெற்ற தந்தைக்கேயுரிய பொறுப்புணர்வுதான் அவருக்கும்.

"அப்பாடா நல்லவேளையாக நதாவின் ஆட்டோ ஹோர்ன் சத்தம்.

நிமிர்ந்து பார்த்தேன் எங்கட மில்லுக்கு அடிக்கடி அரிசி ஏத்த வார இவருக்குப்பழக்கமான தம்பிதான்.

ஓடிப்போய் ஏறியவள் என் பக்கம் திரும்பி உங்கட ஊட்டு வழியாத்தான் போவம் நீங்களும் ஏறுங்க ரீச்சர் என்றாள் ஒருவகைத் துள்ளலோடு.

"இல்லையேம்மா… நீங்க வெள்ளை மணல் பக்கமாத்தானே போவிங்க..."

"நீங்க மொதல்லே வந்து ஏறுங்க ரீச்சர்... நான் இண்டேகி பைசல் நகருக்கு ம்மாக்கிட்டே போவ போறேன்."

என்னவருக்கும் ஓட்டோவில போறதா ஒரு மெசேஜ் வைத்துப்போட்டு அவளருகில் போய் உட்கார்ந்தவாறே கொஞ்சம் கலவரமாய்

"என்னது...ம்மா வீட்டுக்கா.." என்றேன்.

அலைகடலோரமாய் ரம்மியமான சூழலும் குளுகுளுவென்ற இயற்கைக் காற்றுமாய்... வெளிச் சிக்கல்கள் கூட ஏதுமற்ற இப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்து நான்கு வருடங்கள் முடிந்து விட்டிருந்தன. பெற்றோர், பிள்ளைகள் சக ஆசிரியர்களால் எந்த நெருக்கீடுகளும் இதுவரை வந்ததில்லை.ஆறாம் வகுப்பு தொடக்கம் பதினோராம் வகுப்பு வரைக்கும் நம்மட பாடத்திற்கு நாம மட்டுமேதான். நம்மட வலயம் நம்மள மாதிரி இன்னொருவரையும் இங்கே அனுப்பிவைக்காதா என்ற ஒரேயொரு எதிர்பார்ப்பைத்தவிர.

இடைவெளியற்ற தொடர்ச்சியான பாடவேளைகள்.... இரவுபகலாய்க் கண்களைப் பூக்கச்செய்யும் ஒப்படை, செயற்பாட்டுப்பத்திரங்கள்... கற்பித்தல் கடந்த இதர வேலைகளுமென இடையிடையே களைப்பும் அயர்ச்சியுமாய் உடலும் உள்ளமும் சோர்ந்தே போனாலும் அதையும் மீறிய தெம்பையும் புதிய உற்சாகத்தையும் எனக்குள் உற்பவிப்பவை இந்த நதாபோன்ற சுறுசுறுப்பான செல்வங்கள்தான்.

இவளை ஆறாம் வகுப்பில் இருந்தே அவதானித்து வருகிறேன். கெட்டிக்காரி. நேர்த்தியாக வருவாள். லேப்புக்குள்ளே போறதென்றா அவளுக்கு உயிர். பரிசோதனைக் கென்று நாம கொண்டு வரச்சொல்ற பொருட்களுக்கு மேலையும் குசினிக் குள்ள உள்ள உப்பு, புளி, மஞ்சள் எல்லாம் அள்ளிக் கொண்டு வருவாள்.

ஏலவலுக்கும் நல்ல ஸ்கூலும் நல்ல ரீச்சர்சும் செட்டாகிட்டா சந்தேகமேயில்லை இவளொரு டொக்டர்தான் என்று மனசுக்குள் அடிக்கடி கனாக் காண்பேன். நம் கனவு நனவாக வேணுமே என்ற பிரார்த்தனைகளும் கூடவே வரும்.

"என்ன புள்ளே ம்மாவீடு..... வாப்பாவீடு என்று கதை விடுகிறாய்...." மெதுவாய்க் கேட்டேன்.

அவள் சொல்லத் தொடங்கிய போது,

"அட இவ்வளவு நாளும் இது பற்றி விசாரிக்காம இருந்திட்டோமே என்று எனக்கே என்மீது எரிச்சலும் கோபமும்...!

என் வீடு வந்ததும் தேங்க்ஸ் சொல்லி இறங்கிக் கொண்டேன். அதற்கு முன்னமே மறக்காம நாளெக்கி



☞ 04

ம்மாவே கூட்டி வாமா என்றேன்.

"ம்மாவேயா.." உற்சாகமாய்த் தலையாட்டினாள்.

இடைவேளை நேரம் லேப்பிற்குள் பிள்ளைகள் கலைத்துப் போட்ட பொருட்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தபோது ..

"அஸ்ஸலாமு அலைக்கும் ரீச்சர் "

நதாவோடு அவளருகில் முப்பத்தைந்து வயதில் இன்னொரு நதா.

"வலைக்குமுஸ்ஸலாம்... வாங்கம்மா எப்படி சுகமா...?"

நதாவின் படிப்பில் தொடங்கிய எங்கள் பேச்சு அவட உம்மா பற்றி வந்தபோது இடைவேளை முடிந்திருந்தது.

டைம் டேபிள் பார்த்தேன் இந்த ஐந்தாம்பாடம் எனக்கு ப்ரீதான். நதாவை அவட வகுப்பிற்கு அனுப்பிவிட்டு சப்ராசிடம் ஒரு பெப்சிக்கு ஓடர் செய்தேன்.

"என்னம்மா நதா இப்ப கொஞ்ச நாளா செரியான டல்லா இருக்கா. ஹோம்வொர்க் ஒண்டும் பண்ணி வாறதும் இல்லே அதோட மற்றப் பிள்ளகளோடையும் கடுகடுன்னு இருக்கா எடுத்ததெற்கெல்லாம் டென்ஷன்... தனிமையிலே ஆழ்ந்த யோசனை... அதுமட்டுமில்லாம ஸ்கூல் விட்டா ஒருநாள் வெள்ளை மணல், ஒருநாள் பைசல் நகர் என்று மாறிமாறித் திரிஞ்சா அவ எப்படிப் படிக்கிற... என்னதான்மா ஒங்கட பிரச்சின..."

"ஓம் ரீச்சர் நான் ஸ்கூலுக்கு நாலஞ்சி தரம் வந்தப்பவேல்லாம் ஒங்கள சந்திக்க முடியாமப் போயிற்று. நதாட கிளாஸ் டீச்சருக்கு எல்லாம் தெரியும்"....

குரல் கொஞ்சமாய்க் கர கரக்க...

"நதாட வாப்பா..." மெதுவாய் இழுத்தேன்.

"அவர் சூடான் நாட்டுக்கு வேலைக்கு போனார். இப்ப லீவுல வந்திருக்கார்போல ."

"எனா சூடானுக்கா.... மரியான் படத்துல நம்ம தனுஷ் தீவிரவாதிங்களுக்கிட்ட மாட்டி சீரழிஞ்சு வீடுவந்து சேருறத பாத்துப் போட்டுமா அங்க அனுப்பினிங்க..." சிரித்தபடியே கேட்டேன்.

இயல்பாகப் பழகியவள்போல என் தோளில் தட்டியபடியே

"ரீச்சர்..!" என்று கல கலத்தவளின் முகம் திரும்பவும் மெதுமெதுவாய் இறுகிக் கண்களும் கலங்கிட... நான் பதறிப் போனேன்.

"சொறிமா... நான் தவறா ஏதும்....."

"இல்லே... இல்லே.. அவரு தீவிரவாதிங்ககிட்ட அகப்பட்டிருந்தாலாவது உசிரக் குடுத்தாவது மீட்டு வந்திருப்பேனே ரீச்சர். ஒரு கேடுகெட்ட பொம்பிளக் கிட்ட இல்லையா மாட்டி கிட்டார். எண்ட வாழ்க்கையே செதஞ்சு போச்சே...." மறுபடியும் சிறு விசும்பல்.

ஆறுதலுக்கு அவள் தோளை மெதுவாய்த் தொட்டேன்.

"பிறகு.....?."

"என்னையும் விரும்பித்தான் முடிச்சார். டைவிங் போவார் .போதுமான வருமானம். நதாக்கு ஒரு தம்பியும் இருக்கு. ஒரு கொறையுமே இல்லாம நல்லாத்தான் வாழ்ந்தோம்... என்ன செய்றது... விதி... இவருக்கு வந்த பேராசை... வெளிநாட்டு போறேண்டு .ஓடியோடித் திரிஞ்சார் கொழும்பிலே லொட்ஜிலே கண்ட பழக்கமாம் பிறகு பார்த்தா... எனக்குத் தெரியாம அவளோடையும் கள்ளத் தனமா... மறுபடியும் கன்னங்களில் ஈரம்.

ஊருக்குள்ளே கொஞ்சங் கொஞ்சமாய் கசிஞ்சாலும் நான் நம்ப வேயில்ல ரீச்சர்... அவரில அவ்வளவு நம்பிக்கை. எல்லாம் முடிஞ்ச பிறகு தான் உண்ம தெரிஞ்சுது. எவ்வளவு அழுது கெஞ்சி மன்றாடியும் பயனில்ல... அவர்ட முழுக் குடும்பமும் ஒத்துத்தான் கூட்டிக்குடுத்திருக்காங்கபோல..... ஊர்ல ஒலகத்துல நடக்காத ஒண்டா... அவன் ஆம்பிளைதான எதுவும் செய் வான். ஒனக்கு சோறும் சீலையும் தந்தா சரிதானே எண்டாங்க."

"என்னது சோறும் சீலையும் மட்டும்தான் ஒரு பெண்ணோட வாழ்க் கையா... அப்போ அதைத் தாண்டி அவளுக்கு இந்த உலகத்துல ஒண்டுமே இல்லையா... என்ன கணிப் பீடு இது.." எனக்கும் சூடானது..

"அப்ப அவர் என்னம்மா சொன் னார்?"

"சந்தர்ப்ப சூழல் தவறு நடந்திட்டு... ஒனக்கு ஒரு கொறையுமே வராம பார்த்துக்கிட்டு அவளையும் எண்டார்.

".சீ...யாருக்கு வேணும் இந்த அரை வாழ்க்கை.... நீ அவளோடையே கிடந்து சாகுடாண்டு சொல்லிப்போட்டு எங்க வீட்டுக்கே திரும்பி வந்திட்டேன் ரீச்சர்."

"ஏன் ரீச்சர் நான் இப்படி செய்தி ருந்தா நெலமே எப்படி இருந்திருக் கும்?நாமளால இப்படியெல்லாம் நெனச் சுக் கூட பார்க்கேலுமா..?""

"சரிமா.. முதல் மனைவியோட அனுமதி இல்லாம ஆண்கள் ரெண்டாவது முடிக்கேலா எண்டுதான சொல்றாங்க ...பிறகு ஒங்களுக்குத் தெரியாம இது எப்படி,,,?

கண்களைத் துடைத்துக் கொண்டவாறு நிமிர்ந்தவள்..

"அவன்களுக்கு எதுக்கு ரீச்சர் நம்மட அனுமதியெல்லாம்.. இங்கே எல்லாமே சும்மா பேருக்குதான்.. காச வீசி எறிஞ்சா இந்தக் கள்ள மௌல விமார் ஒடனே காவின் எழுதிடுவாங் களே..."

ச்சே... என்ன மனிதர்கள் இவர்கள்... பெண்களின் உணர்வுகளுக்கெல்லாம் ஒரு தனித்துவம் மதிப்பு மரியாதை என்றெல்லாம் ஒண்டுமே இல்லையா...

என் உடலும் மனசும் ஒருசேர ஒடுங்கிப்போனது..

"அப்ப பிள்ளைகள்...." எவ்வளவோ மன்றாடியும் தர மறுத்திட்டான்."

"மகன் ஒருநாள் அவருக்கிட்ட சொல்லிக் கொள்ளாமலே ஓடி வந்திட்டான். வாப்பாக்காரன் வந்து காலுல உழுந்தும் அவன் போகல நதாதான் பாவம். அங்கேயும் இங்கேயுமா அல்லாடுறா.."

யா அல்லாஹ் இதென்ன

கொடுமை. இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் என்ன பாவம் செய்தார்கள்? பெற்றவர்களின் பொறுப்பற்ற நடத்தைகளால்... தேவையற்ற சலனங்களால்.. சபலங்களால்... பிள்ளைகளுக்கு எவ்வளவு பெரிய சிக்கல்கள்?

மனசு மறுபடியும் பதறியது.

"இவ்வளவு நாளும் போனது போகட்டும்... நதாட ஓலேவல் எக்ஸா முக்கு இன்னமும் மூன்று மாசந்தான் இருக்கு. ஒழுங்கா க்ளாஸ் போகணும், ஒழுங்கா படிக்கணும். நல்ல ரிசல்ட்டுக்கு எதிர்பார்க்கிற பிள்ளை இல்லையா இவள்.

உங்க கணவரோட பேசி ஒரு இடமா அவ இருக்கிற மாதிரிப் பாருங்க. அங்கே ரெண்டு கொப்பி... இங்கே மூண்டு உடுப்பு... இதெல்லாம் படிக்கிற பிள்ளைக்கு ஒருநாளும் சரிப்பட்டு வராது" என்றேன் கொஞ்சம் இறுக்கமாய்.

"அவ அங்கேதான் இருந்தா..... எனக்கு நல்லாத்தெரியும் அவருக்கு பிள்ளைகள் எண்டா உசிர். அந்தப் பொம்பிளையும் ஒரு குறை வைக்காமதான் பார்த்திருக்கா.. அவருக்கு அங்கேயும் ரெண்டு வயசு மகன்.அவன்ட துடினம் கரைச்சல் தவிர வேற ஒரு பிரச்சினை இல்லேண்டுதான் அடிக்கடி சொல்லும்.. அதுதான் பிள்ளையை ஒரேயடியா வரச்சொல்லி தெண்டிக்கல்ல. இப்பதான் அவளுக்கு அங்கே புதுப்பிரச்சினை....." என்று சொல்லி இழுத்தாள்.

"என்ன"

"அவட தம்பிக்காரன் ஒருத்தன் அங்கே அடிக்கடி வாறானாம். இடைக்கிடையே ராவைக்கும் நிக்கிறானாம். அவனது பார்வை போக்கு சரியில்லையாம். அதான் பயப்படுறாள்."

ச்சே... ஒரு பிள்ளைக்குத் தன்சொந்த வீடே பாதுகாப்பு இல்லாமப் போறது மகா கொடுமை.

"ரீச்சர்...பாடம்.." பத்தாம் வகுப்பு மொனிற்றர் சிம்லா.

"அட பெல்லடிச்சது விளங்கல்லையேமா... சரி போங்க வாறன்"

"அப்ப சரி ரீச்சர் நாங்க பிறகு பேசுவம்... எண்ட பிள்ளையை நல்லா கவனிச்சுக் கொள்ளுங்க. புத்தி சொல்லிக் கொடுங்க. உங்கட கதைய அவள் கேட்பாள்."

நல்ல வேளையாக அன்றைக் கொரு வாப்பா சொல்லிவிட்டுப் போனமாதிரி

"பொடியன் சொன்ன சொல் கேட்கிறான் இல்லே ஒங்களயும் கரைச்சல் குடுத்தான் எண்டா கண்ணை மட்டும் விட்டுப் போட்டு பயப்பிடாம மத்த எல்லா இடமும் அடியுங்க ரீச்சர்" எண்டு இவளும் சொல்லவில்லை.

வீட்டுக்கு வந்து நெடு நேரமாகியும் ஒரு வேலையும் ஓட வில்லை. நதாட கிளாஸ் ரீச்சர் நஜினாவுக்கு கோல் எடுத்தேன்.

"..............அப்ப இது ஒங்களுக்குமட்டும்தான் டீச்சர் இது தெரியா.."

"அதெல்லாம் விடுங்க ரீச்சர். இவ ஒழுங்கா எக்ஸாம் எழுதி அடுத்த கட்டத்திற்கு போகணும். இருந்து

படிக்க இவளுக்கு பாதுகாப்பான வீட்டுச் சூழல் தேவை.... அவட வாப்பாவோடையும் பேசிப் பார்ப்பமா...”

“சுகைரா ரீச்சரோடும் பேசுவோம் சரியா...”

மாடியில் ஆலோசனை வழி காட்டலுக்கான அறை.

“அஸ்ஸலாமு அலைக்கும் நான் நதாட வாப்பா.”

ஒரு நாற்பது.. நாற்பத்தொரு வயசிருக்கலாம். குப்பென்ற செண்ட் மணமோ... சிகரட் நெடியோ இல்லாமல் உடையும் பேச்சும் பார்வையும் கூட கண்ணியமாகவே தெரிந்தது. நதாவின் உம்மா வாறது தொடர்பில் நாங்க அவருக்கு அறிவிக்கவில்லை.

அதிபரிடம் இது தொடர்பில் பேசி ஏற்கனவே முன் அனுமதி பெற்றிருந்தோம். எங்கட அதிபர் நலீப்சேர் எங்களில் முழு நம்பிக்கை வைத்து எங்களைச் சுயமாக இயங்க விடுபவர். அவரின் நிறைவான வாசிப்பு அனுபவமும் நல்ல இலக்கிய ரசனையும் கூட இதற்குக் காரணமாய் அமைந்திருக்கலாம். அதிலும் ஆங்கில இலக்கியத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டவர்.

நான், வகுப்பாசிரியை நஜீனா, கவுன்சிலிங் சுகைரா ரீச்சர் நதாவின் உம்மா தவிர அறைக்குள் வேறு யாரையும் அனுமதிக்கவில்லை.

கண்டவுடன் இருவருக்குமே அதிர்ச்சி, பதற்றம், கோபம், ஆத்திரம். நாங்கள் மாறி மாறிப் பேசினோம்.

எங்கள் மூவரின் பேச்சும் நதாவின் படிப்பு, பாதுகாப்பு, அவளின் டாக்டர் கனவுகள் பற்றி மட்டுமே.

எனினும் உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டிருக்கும் எரிமலை எவ்வளவு நேரத்திற்குப் பொறுக்கும், இடையிலே அவள்தான் ஒரு கட்டத்தில் எல்லை மீறினாள்.

“ச்சீ... நீயெல்லாம் ஒரு மனுசனா,,,? நம்பி வந்த என்ன நடுத் தெருவிலே விட்டுப்போட்டு அவளோட போனாய்தானே... இப்ப பெரிசா சபையிலே பேச வந்திருக்காய்...”

அவன் கிடந்து பதறினான்.

“இல்லே.. இல்லே.. அதே மட்டும் இங்கே இழுக்காதிங்க.. இங்கே நாம நதாட படிப்பு பத்தித்தான் பேசுறோம்.... நான் ஒங்களே ஏமாத்தல தானே... கை விடலதானே....”

“என்னது... ஏமாத்தலையா... இதெவிட என்னடா ஏமாற்றம் வேணும்...??”

அவள் குரல் உயர உயர... இங்கே வேறு யாராவது வந்து விடுவார்களோ என்று நான் உண்மையில் பயந்தே போனேன். நல்ல வேளை அப்படியொன்றும் நடந்து விடவில்லை.

திடீரென சுஹைரா டீச்சர்தான் கேட்டாங்க

“நீங்க ரெண்டுபேரும் டைவர்ஸ் பண்ணிட்டிங்களா...”

“எங்க டீச்சர் காதிக் கோட்டுக்கல்லாம் குடுத்தேந்தான்.... இவன் ஒரு தவணைக்குமே வரலையே.. மாசா மாசம் காசெல்லாம் ஒழுங்கா தாரத் தாலே எங்களுக்கும் பெரிசா ஒரு நடவடிக்கையும் எடுக்கேலாண்டு அவங்களும் கையை விரிச்சிட்டாங்க...”

"அப்ப ஒங்களுக்கு இன்னொன்று முடிக்கிற ஐடியா ஏதும்..."

"ச்சீ... இன்னொன்டா... விரும்பி முடிச்சி... ரெண்டு புள்ளைகள் பெத்து பன்னண்டு வருஷம் ஒண்டா வாழ்ந்த இவனே இப்புடித் துரோகம் செஞ்சிட்டான்...இனி இன்னொருத்தனை நான் நம்பவா..?"

நாங்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம்.

சுகைரா ரீச்சரே திரும்பவும் தொடங்கினார். ஆலோசனை வழிகாட்டலுக்கும் பொறுப்பானவர் அல்லவா... இப்படியான எத்தனை பிரச்சனைகளைத்தான் கண்டிருப்பார்.

"பிள்ளையின் படிப்புக்காக கொஞ்ச நாளாவது ரெண்டு பெரும் சேர்ந்து வாழுங்களேன்மா... நதாவும் எங்களுகிட்டே இதத்தாம்மா சொல்றா. உம்மாவும் வாப்பாவும் ஒண்டா சேரணும். எப்பவுமே ரெண்டுபேருமே எங்களுக்கு வேணுமென்று...."

முதலில் இருவருமே மிகக் கடுமையான வார்த்தைகளால் இதற்குத் தம் எதிர்ப்பை வெளிக்காட்டினாலும் நாங்கள் மூவருமே மாறிமாறி முன்வைத்த கருத்துகளுக்குள் கொஞ்சம் அடங்கிப் போனார்கள்.

எனக்கு அந்தப் பெண்ணின் சுயமரியாதையில் பேசனல் லைஃபில் கை வைக்கிறோமோ என்ற குற்றவுணர்வு மிகையாய் உறுத்தியது.

அன்றைக்கு என்னவோ நதாவின் பாதுகாப்பு, படிப்பில் மட்டுமே எங்கள் மொத்தக் கவனமும். யா அல்லாஹ்.. எல்லாத்துக்கும் நீயே பொறுப்பு"

அடுத்துவந்த மூன்று மாதங்களிலும் ஏனைய பாட ஆசிரியர்களாலும் அவதானித்துக் கூறக் கூடிய அளவுக்கு நதாவில் நல்ல முன்னேற்றம்.

இடைக்கிடையே நதாவின் உம்மாவுக்குக் கோல் பண்ணுவேன். உற்சாகமாய்ப் பதில் வரும் .பிள்ளையின் படிக்கிற ரூமுக்குள் நல்ல பவரான லைட் போட்றது தொடங்கி பாஸ்ட் பேப்பர்ஸ் வாங்கிகுடுக்கிறது... பிள்ளை படிச்சுமுடிச்சித் தூங்குற வரைக்கும் வீட்டில முடியுமான அளவு நாமளும் முழிச்சிருக்கிற வரைக்கும் எங்கட உரையாடல் தொடரும்.

"எனா... இந்த வார டிசம்பர் லீவுல அந்தப்பிள்ளை நதாவோட வீட்ட ஒரு தரம் போய் வருவமா...? அதுட உம்மா என்ன எப்பவும்தான் கூப்பிடுறா..."

நான் கணவரிடம் மெதுவாய்க் கூற... அவரோ ஒரு நக்கல் சிரிப்போடு அதைவிடவும் மெல்லிய குரலில் என்னிடம் கேட்டார்..

."என்ன அந்தப் பிள்ளை நல்லாப் படிக்குதா எண்டு பார்க்கவா... இல்லே... அவட உம்மாட பெமிலி லைப் பத்தி நோண்டவா... அங்கே போவப்போறிங்க...."

டிசம்பரின் இடைவிடாத மழையும் வெள்ளமும் அது பரிசாய்க் கொண்டு தந்த குளிர் காய்ச்சலும்... எனக்கே எனக்கான விருந்தினர்களுமாய்... எப்போதும் போலவே எனது விடுமுறைக் காலம் மட்டும் வீட்டோடையே முடிந்துவிட....
உண்மையில் நதாவைப்பற்றிய நினைவே முற்றாய் மறந்துபோனது.

அடுத்து வந்த ஜனவரியின் நடுப்பகுதி. எங்கள் புதிய ஆறாம்தர விஞ்ஞானக் குஞ்சுகளோடு லேப்பிற்குள்.

இன்னமும் பெயர் மனசுக்குள் சரியாய் நிற்காத புதுமுகங்களின் செல் லக்கலகலப்புகள்.

நுணுக்குக் காட்டியில்வைத்து அவதானிக்கவென அந்தப் பிஞ்சுகள் கொண்டுவந்து குவித்திருந்த பழைய பாண்துண்டுகளும் பரமீசியங்கள் நீந்தி விளையாடும் வைக்கோல் நீர் பொலித் தீன் முடிச்சுகளும்... பூஞ்சணம் பிடித்த என் மைக்ரோஸ்கோப் லென்ஸ்களு மாய் நான் வியர்த்து வழிந்து கொண் டிருந்தவேளை...

“ரீச்சர்..”

எனக்கு மிகவும் பரிச்சயமான அந்தக் குரல்...

நதாவின் உம்மாதான்

முன்னரையும் விடவும் கொஞ் சம் பளபளப்பாய்... புதிய டிஸைன் அபாயா.. இத ரெப்செய்த சோலுமாய்ச் சிரித்தபடி அருகில் வந்தவள்...

“எப்படி சுகமா...” என்றாள்.

“நல்ல சுகம்... நீங்க.. நதா வெல்லாம் எப்படி...”

“நல்லம் டீச்சர்... நீங்க சொன்ன மாதிரியே நைட்டா சென்டர்ல ஐ ரீ கிளாஸ், பிறகு இங்கிஷ் கிளாசுக்கெல் லாம் போறா... மகனையும் இங்கேயே சேர்த்துவிடுவம் என்று தான் நானும் அவங்களும் வந்த... நிறையத்தரம் ஒங் களுக்கு கோல் எடுத்தேன்... ஆன்சர் இல்லே... நம்பர் மாத்திட்டிங்களா.. நதா ஒங்களுக்கு சலாம் சொல்லச் சொன்னா... மீட்டிங்க தொடங்கப்போ குது.. நான் போயிற்று வரவா ரீச்சர்..” என்று திரும்பியவளிடம்

கேட்பதா. விடுவதா என்ற சிறிய மனப்போராட்டத்தின் முடிவில் கேட்டே விட்டேன்.

“பிறகு.. ஓங்கட பெமிலி லைஃப் எல்லாம் எப்படிம்மா போகுது...” அதற் குள் அவள் போன் வைப்ரைட்டாகியது.

அவள் கணவராகத்தான் இருக்க வேண்டும். ஒருவிதப் பூரிப்போடு விரைந்து அருகில் வந்தவள் என் முகத்தில் படர்ந்திருந்த வியர்வை யைக் கூடப் பொருட் படுத்தாமல் என்னை இறுக அணைத்து கன்னத்தில் ஒரு முத்தமும் வைத்தபடி

“அவங்க கூப்பிடுறாங்க... பிள் ளைகளையும் கூட்டிகிட்டு ஓங்கட ஊட்ட வாரேன் ரீச்சர்.” என்றபடி விரைந் தாள்.

நதா என்றால் அர்த்தம் பனித் துளியாம்.

இருபத்தேழு வருட ஆசிரியப் பணியில் கடந்துவந்த பனித்துளிகளின் பல்வகைமைகளை என்னவென்பது...

“நாம் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் போராடியும் பெற்றவர்களின் அலட்சியப்போக்குகளால், பொறுப்பற்ற செயல்களால். மோசமான குடும்பச் சூழ் நிலைகளால்.... பெரும் எதிர் பார்ப்புக ளோடு மண்ணில் விழுந்த மறுகணமே வற்றி வறண்டு காய்ந்து போன பனித் துளிகளும்....

சூழல் வெப்பநிலைக்குத் தகுந்த மாதிரி தன் உடல் வெப்பநிலையை மாற்றி வாழப்பழகிக் கொண்ட ஈருடக

வாழிகளாய்.. இவள் போன்றுதான் பெற்றவைகளுக்காய் தன் சுயம், பிடிவாதம், தன்மானம் அனைத்தையுமே துறந்த தாய்மையின் அர்ப்பணிப்புகளால் வற்றாத நதியாகி சமூகத்துக்குப் பெரும் பயன்தரக் காத்திருக்கும் பனித்துளிகளுமாய். என நான் நனைந்து கரைந்த வைரத்துளிகள்தான் எத்தனை... எத்தனை...????.

மெதுவாய் கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொள்கிறேன்.... நிறைந்த மனசோடு.

---

# சுதந்திர இலங்கை

*தாயில் சுரக்கும் பாலும் அதுபோல்*
*தாய் நாட்டில் சுரந்திடும் பசுமை யாவும்*
*குழவி எங்கள் உரிமைதானே*
*குழப்பம் வேண்டாம் கொள்கை சரியே*

*சாதி மத பேதம் உடையில் மட்டும்*
*சாதக எண்ணங்களே மனதில் என்றும்*
*ஏற்றத் தாழ்வு நிலத்தில் மட்டும்*
*ஏற்றமுள்ள செயல்களே நிறைவைத் தட்டும்*

*தோளின் மேலே கைகள் போடும்*
*தோழர் ஆட்சி தருமே மாட்சி*
*விழிகள் வழியே வழியும் நீரில்*
*விருப்பம் கலத்தலே சுதந்திரத்தின் சாட்சி*

*நதிகள் வனங்கள் மலைகள் போன்றே*
*நம்மிலங்கையர் வாழ்விலும் தென்றல் வீசும்*
*அதர்மம் களைந்து அகிம்சை தரித்து*
*அரசாங்கமும் நன்றே பாதை வகுக்கும்*

*இரத்தினத் துவீபமென்ற இலங்கை மண்ணும்*
*இனிமேல் அதுபோல் மக்கள் மனதும்*
*இன்புற்று விளங்கி வளங்கள் கொழிக்கும்*
*இப்பெயருடனே அனைவர் எதிர்காலமும் செழிக்கும்*



**பஸ்லா பர்ஸான்**
**காத்தான்குடி**

# போதைப்பொருள் துஷ்பிரயோகத்துக்குள்ளான இளம் சந்ததிகளை மீட்டெடுப்போம்.



**ஹாஜறா கலீலுர் ரஹ்மான் – காத்தான்குடி**

இன்று உலகளாவிய ரீதியில் தலை விரித்துத் தாண்டவமாடும் பிரச்சனைகளில் முதன்மையானது போதைப்பொருள் பாவனையாகும்.

வியாபார நோக்கில் சமூகத்தில் உள்ள பெரும் புள்ளிகள், மேல் தட்டு மக்களால், பாதாள உலகக் குழுக்களால் மேற் கொள்ளப்படுகின்ற அருவருப்பான இச்செயற்பாடு சமூகத்தில் உள்ள அடிநிலை மக்களை மட்டுமன்றி சிறுவர்கள், இளைஞர்கள், கண்ணியமான, கௌரவமான குடும்பங்களில் உள்ளவர்களைக் கூட இழிநிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

செல்வத்தைப் பெருக்கும் நோக்கில் வருங்கால இளம் சந்ததிகளை இலக்கு வைத்து அவர்களைத் தளிர்விடச் செய்ய விடாமல் முளையிலேயே கிள்ளி எறிய போதைப் பொருள் மாபியாக்கள் பெரும் பிரயத்தனம் எடுக்கின்றன.

இன்று புதிய புதிய பெயர்களில் புதிய புதிய வடிவங்களில் நவீன போதைப் பொருட்கள் அறிமுகமாகி உள்ளன. பாடசாலை மாணவர்களையும் இளம் சந்ததியினரையும் குறி வைத்துப் பாடசாலைக்கு அண்மிய இடங்களில் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு மைதானங்கள், சிறுவர் கூடும் இடங்கள் என்பவற்றில் இரகசியக் கொடுக்கல் வாங்கல்கள் இலவச விநியோகம் என்பன இடம் பெறுகின்றன.

இலவசமாகப் போதை பொருளை விநியோகம் செய்து இளைஞர்களை இதற்கு அடிமை யாக்கி பின்னர் விலைபேசி கூடுதல் விலைக்கு விற்றுத் தமது வர்த்தகத்தை விருத்தி செய்ய இந்த மனித மிருகங்கள் முன்வந்துள்ளன. எனவே இதற்கு அடிமையாகி விட்ட சிறுவர்கள், இளைஞர்கள் வீட்டில் இருந்து சிறிது சிறிதாக திருட ஆரம்பித்து பின்னர் பாரிய திருட்டு, கொள்ளை, கொலை, விபச்சாரம் ,மோசடி, ஏமாற்று, சிறுவர் துஷ்பிரியோகம் போன்ற சமூக விரோத செயல்களுக்குக் காரணமாகி விடுகின்றனர்.

இது இன்று எம் சமூகத்தை அச்சுறுத்தும் பிரதான பிரச்சனையாக மாறி உள்ளது மட்டுமன்றி பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகத்தவர்கள் அனைவருக்கும் பெரும் சவாலாகவும் அமைகின்றது.

போதை என்பது நாம் நினைக்கும், உணரும் மற்றும் செயற்படும்



விதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடாகும். அதற்கு காரண மாக அமைகின்ற அனைத்துப் பொருட் களும் போதைப் பொருட்களாகும். இது மனிதனின் தன்னிலையை மறக்கச் செய்வதுடன் மனித உடல், உள பாதிப்புக்களையும் ஏற்படுத்தக் கூடிய துமாகும். இந்த வகையில் மதுபானம், புகையிலை, ஹெரோயின், கஞ்சா, போதை தரும் இன்ஹெலர்கள், ஊசி மருந்துகள், மாத்திரைகள், ஐஸ், நிக் கோடின் எத்தனோல், கொக்கோயின் கலந்த பொருட்கள் போன்ற பல வகைப் பொருட்களை உள்ளடக்கி உள்ளது. மருத்துவ உலகில் பெரும் பாலும் வலி நிவாரணிகளாக அறிமுகப் படுத்தப்பட்ட பல பொருட்கள் இன்று போதைக்காக பயன்படுத்தப்பட்டு வரு கின்றன.

ஆரம்ப காலத்தில் பயன் படுத் தப்பட்ட போதைப்பொருட்கள் உடல், உள, சமூக பாதிப்புகளை ஏற்படுத்தி னாலும் தற்கால நவீன உலகில் பயன் படுத்தப்படும் அபாயகரமான இந்த போதைப்பொருட்கள் உயிர் அச்சுறுத் தலை ஏற்படுத்துகின்றன.

தற்காலத்தில் இந்த நவீன போதைப்பொருட்களை பயன்படுத்து வது ஆரம்பகால கட்டங்களில் இலகு வில் இனங்காண முடியாததாகவே காணப்படுகின்றது. அந்த பாவனையின் தாக்கம் நாள் செல்லச் செல்ல பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே அதிலிருந்து எமது இளம் சந்ததி யினரை மீட்டெடுக்க கடும் பிரயத்தனங் களை நாம் எடுக்க வேண்டி உள்ளது.

இன்றைய நவீன உலகில் இந்த அபாயகரமான போதைப் பொருட் கள் மனிதர்களில் ஏற்படுத்தும் தாக்கத் தையும் பாவனையையும் ஆரம்ப கால கட்டங்களில் இனங்காண்பது மிகவும் கடினமாகவே இருந்தாலும் மனித நட வடிக்கையில், செயற்பாடுகளில் பல மாற்றங்களை ஏற்படுத் தவே செய்கின் றன.

மாணவர்கள் மற்றும் இளம் சமூகத்தவர் மத்தியில் போதைப் பொருள் பாவனையைக் கண்டறியும் வழிமுறைகள்

1. உடல் அறிகுறிகள்

√கண்களில் இரத்தக் கசிவு
√உடல் எடை இழப்பு
√ தூக்கம்
√ விவரிக்க முடியாத காயங்கள்
√உடற்சோர்வு

2. நடத்தை மாற்றங்கள்

√திடீர் மனநிலை மாற்றங்கள்
√ஆக்கிரமிப்பு
√விவரிக்க முடியாத தன்மை
√உந்துதல் குறைதல்
√மந்தமான பேச்சு
√ஒருங்கிணைப்புப் பிரச்சனைகள்
√நடுக்கம் மற்றும் நிலையற்ற நடை

3. மனநிலை மாற்றங்கள்
√ எரிச்சல்
√பதற்றம்
√பீதி
√ மனச்சோர்வு மற்றும் ஆக்கிரமிப்பு போன்ற உளவியல் பிரச்சனைகள்

4. சமூகப் பிரச்சனைகள்

√ மாணவர் சமூக நடவடிக்கைகளில் இருந்து விலகி தங்களைத் தனிமைப் படுத்துதல்
√ கற்றல் குறைபாடு
√வரவின்மை செயற்பாடுகள்
√நடத்தைகளில் மாற்றம்
√பாடசாலைக்குச் செல்லும் நேரம் திரும்பி வரும் இடங்களில் மாற்றம்
√வயதுக்கு மிஞ்சிய சினேகம்

போன்றவற்றுடன் குறுகிய கால விளைவுகளாக அவர்களது தோற்றத்தி லும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன விரிவடைந்த கண்கள், உலர்ந்த வாய், அதிக வியர்வை, விரைவான இதயத் துடிப்பு மற்றும் சுவாசப் பிரச்சனை, மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கை உணர்வு, பற்களை அரைத்தல், அதிக ஆற்றல், குறைந்த பசி போன்றவற்றை அடையா ளப்படுத்த முடியும்.

அத்தோடு நீண்ட கால விளை வுகளாக சுவாசச் சிரமங்கள், கவனம் செலுத்துவதில் சிக்கல், உலர்ந்த வாய், பல் பிரச்சனைகள், வைரஸ் தொற்று சளி அல்லது காயங்கள், அமைதியற்ற தூக்கம், நிறை இழப்பு, நிதி, வேலை மற்றும் உறவு பிரச்சனை கள், இதயம் மற்றும் சிறுநீரகப் பிரச் சனைகள், பக்கவாதம் மனநோய் என் பவற்றோடு இளவயது மரணங்களை யும் ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைகின்றது.

பெற்றோர்கள் சில வேளைக ளில் விடுகின்ற தவறுகளே பிள்ளை கள் திசை மாறி போகவும் காரணமாக விடுகின்றன. எனவே பிள்ளைகள் விட யத்தில் பெற்றோர்கள் கூடிய கவன மும் கண்காணிப்பும் அக்கறையும் செலுத்துவது அவசியமாகும்.

தன் பிள்ளை எங்கு செல்கின் றான். யாரோடு பழகுகின்றான். எங் கெங்கு பிரத்தியேக வகுப்பு, விளை யாட்டு என்று எங்கு செல்கின்றான் என்பதை அவதானிக்க வேண்டும். அத் தோடு தன் பிள்ளையின் நண்பர்கள் அவர்களின் பின்புலம், பழக்க வழக் கங்களை ஆராய வேண்டும்.தேவைக்கு மேல் அதிகமாகப் பணம் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். வயதுக்கு மிஞ்சிய பெரியவர்களுடன் சகவாசம் வைத்தி ருந்தால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். எனவே பிள்ளையின் செயற் பாடுகள், நடவடிக்கைகள், நடத்தை மாற்றங்கள் என்பவற்றை அதிக அக் கறையோடு அவதானிக்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையி லான இடைவெளியை இல்லாமலாக்கி அவர்களுடன் அன்பு கலந்த நட்புற வோடு பழக வேண்டும். பாடசாலை ஆரம்பிக்கும் நேரம், முடிவடையும் நேரம், பிரத்தியேக வகுப்பு நேரசூசி என்பவற்றைத் தெரிந்து வைத்திருத் தல் வேண்டும். பிள்ளைகள் ஒன்று கூடல் கேளிக்கைகளில் ஈடுபடுவதை கண்காணிக்க வேண்டும். பெண் பிள்



ளைகளுடையதில் பெற்றோர்கள் இரட்டை மடங்கு கவனமும் கண் காணிப்பும் வைத்திருத் தல் வேண்டும்.

போதைப்பொருள் பாவனை யால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு பல்வேறு மறுவாழ்வு திட்டங்கள், புனர் வாழ்வு நடவடிக்கைகள் அரசினாலும் சமூக நிறுவனங்களினாலும் தேசிய ஔடதங்கள் அதிகார சபையினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே ஆரம்பத்தில் பிள்ளைகளின் நடத்தை மாற்றங்களைக் கண்டறிந்து இளம் சமூகத்தவரை இந்த போதைப்பொருள் துஷ்பிரயோகத்தி லிருந்து பாதுகாக்க வேண்டியது நமது தலையாயப் பொறுப்பாகும்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் போதை தரக்கூடிய அத்தனையும் ஹராமாகும். ஹராமை உட்கொண்ட உடல் சுவனம் நுழையாது. எனவே போதைப்பொருள் பாவனை ஒரு பாவ மான செயலுமாகும். குழந்தை வளர்ப்பு என்பது பெற்றோர்களின் அமானிதமான பொறுப்பாகும். பிள்ளைகளைப் போ தைப்பொருள் பாவனையிலிருந்து மீட் டெடுக்க தாமதித்தால் தவிக்க நேரி டும். உரிய காலத்தில் பிள்ளைகளின் நடத்தை மாற்றங்களை இனம் கண்டு அவர்களை நல்வழிப்படுத்தி, அவர் களை மீட்டெடுக்க வேண்டியது இன் றைய காலத்தின் கட்டாயத் தேவையா கும்.

## புதிய அங்கத்தவர்கள் இணைப்பு.

.ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான. SRI LANKA PEN CLUB ற்கு இம்மாதம் முழுவதும் புதிய உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். ஆற்றலுள்ள முஸ்லிம் பெண்கள் மட்டும் இணைந்து கொள்ள முடியும்.பெயர் முகவரி அடையாள அட்டையின் நிழற்படம் என்பவற்றை 0770696559 என்ற தலைவியின் வாட்சப் இலக்கத்திற்கு அனுப்பி விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாகம் SLPC

## I am sorry papa

You asked for tea, papa
I said there's no gas nor oil To
get the water boiled

You went away
Determined to stay
In the queue for the day
To buy some oil
But alas
All that came was
The empty can, daddy
With your dead body

A dedicated and diligent
Employee of the government
You've been....
Yet in a kerosene queue...
You were killed pathetically

Papa pardon me
I couldn't serve you tea
Not even for those
Who came to bid you farewell
At your funeral

Because
I can't lit the stove
Haven't got the oil till now

It is my brother's turn
In the queue to stand
Where are you stood before

I am sorry papa...!

Translated by :
Mareena Ilyas Shafee

Tamil Poem by:
Fahmiya Shareef
(1st draft)

**மொழிபெயர்ப்புக் கவிதை**

## மன்னித்து விடுங்கள் வாப்பா

**தேநீர் கேட்டீர்கள்.. வாப்பா
அடுப்பெரிக்க வழியில்லை என்றேன்..**

**வரிசையில் நின்றாவது
வாங்கி வருவேனென்றீர்கள்...**

**வந்ததெல்லாம் வெற்றுக் கேனும்
உங்கள் வெறும் உடலும் தான்..**

**மாய்ந்து மாய்ந்து உழைத்தீர்கள்
அரசு சேவைக்காய்க் கேவலம்...
ஒரு மண்ணெண்ணெய் வரிசையில்
உங்களைக் கொன்றுவிட்டார்கள்..**

**மன்னித்து விடுங்கள் வாப்பா
உங்களுக்கு மட்டுமல்ல உங்கள்
மையத்திற்கு வந்தவர்களுக்கும்
என்னால் தேநீர் கொடுக்க
முடியவில்லை..**

**ஏனென்றால்
நீங்கள் நின்ற இடத்தில் இப்போது
தம்பி நின்று கொண்டிருக்கிறான்..
இன்னும் நம் வீட்டில்
அடுப்பெரியவில்லை வாப்பா..**



**பஹ்மியா ஷரீப்**

## The egoic self....!

No one
Has taught me
Anything....

It was me
Who did
This and that

"I searched it myself
I discovered it myself
I ended up doing it myself..."
They blabber....!

I can't stop laughing
At people
Who're boasting
Claiming that
The days are moving
Because of them...

Of all the planners
There's a great planner
That's Allah
How did they forget it.....?

Do they think
He disappeared
After creating
The heaven and earth....?

Don't they know
Wisdom is given
By Him;
And the fate
Is decided by Him...?

They are sinking
There own souls
In Arrogant thoughts
Without realising
It's a sin...

They can find Him
Through their lost self
But they never try
What a pity.....!

Translated by:
Mareena Ilyas Shafee

Tamil poem by:
Jesmine Ramees

(1st draft)

மொழிபெயர்ப்புக் கவிதை

## நான்

எனக்கு யாரும்
எதையும் கற்றுத் தரவில்லை

இதைச் செய்தது நான் தான்
அதை செய்ததும் நான் நானேதான்

நானாக தேடினேன்
நானாக கண்டுபிடித்தேன்
நானாகச் செய்து முடித்தேன்

நானிலத்தில்
என் நாட்கள்
நகர்வது என்னால் மட்டுமே
என எண்ணிப்
பிதற்றித் திரியும்
அற்ப மானிடர்களைப் பார்த்துச்
சிரிப்புத்தான் வருகிறது..

திட்டமிடுபவர்களிலெல்லாம்
சிறந்த திட்டமிடுபவன்
அல்லாஹ் என்பதை அவர்கள்
எப்படி மறந்தார்கள்

மண்ணையும் விண்ணையும்
மட்டும் படைத்துவிட்டு
அவன் எங்கோ
மறைந்திருக்கிறான் என
எண்ணிவிட்டார்கள் போலும்

மதியையும் விதியையும் தந்தது
அவனே என்பதை மறந்து
மதி மயங்கி
“ஹம்மாரா” என்னும் வெள்ளத்தில்
தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்
அவர்கள்
இது பாவம்
என்பதை இன்னும் உணராமல்...

பாவம்....
அவர்களுள் இருக்கும்
அவர்களைத் தேடி
அவனைப் பெற அவர்கள்
ஒருபோதும் முயற்சிக்கவில்லை.



ஜெஸ்மின் றமீஸ்

# நெஞ்சோரமாய்

அவியின்
சிறுகதை



ஷாமென் நிஸாம்டீன், – கட்டுகஸ்தோட்டை

அன்பொழுக பார்த்துக் கொண் டவளின் வாயிலிருந்து வந்த வார்த்தை களைத் தாய் ஸுலைஹாவால் தாங் கத் திராணியற்று இருந்தாள்..

இப்படி ஒரு வார்த்தை தன் அன்பு மகளின் வாயிலிருந்து வரும் என்பதை அவள் எதிர்பார்க்கவே இல்லை. ஆசையையும் அன்பையும் கொட்டி வளர்த்த கனிஷ்ட புத்திரி ஷாறா... பக்கத்திலேயே வாயடைத்து நின்றாள் மூத்த மகள் ரீமா.

தனது மைத்துனர்தான் இப்படி என்றால் இவளுமா என துணுக்குற் றாள். என்றாலும் தாயின் மனம் நோகாதபடி

“சரி சரி.. விடுங்கம்மா.. இவ்வ ளவு நாள் இங்க இருந்துட்டீங்க... இப்ப எங்கட வீட்டுக்கு கொஞ்சம் வந்து இரிங்களேன்... ஒரு சேஞ்சுக்கு.” என சமாதானப்படுத்தினாள். தாயின் கண் ணீரை கட்டுப்படுத்துவது சிரமமாக இருந்தது. இவ்வளவு வசதிகள் இருந்தும் என்ன சின்னத்தனம்.. தன் மனைவியை பெற்றவளிடம் இப்படியா கூறுவார்… அதுவும் தனக்கும் மனைவிக்கும் உள்ள பிரச்சனைக்கு இவர் எப்படி காரணமாவார்... உதிர்த்த வார்த்தைகளை மீள எடுப்பது முடி யாது.. அது மனதில் ஏற்படுத்திய ரணம் ஆறாத வடுவாக இருந்தது..

தங்கை ஷாறா ஏதோ ஒரு கோபத்தில் பழைய வன்மத்தை ரீமா விடம் புதுபித்துக்கொண்டிருந்தாள். வாய் கொடுத்தால் வங்காளம் வரை போகலாம் என ரீமா மௌனம் காத் தாள். தன் கருத்தை செயலாற்றுவதில் ஷாறா உறுதியாக இருந்தாள். இறுதி யில் ரீமா பிக்மீ காரை தன் வீட்டிற்குப் போக புக் பண்ணிவிட்டு அந்த அறை யில் இருந்த அலுமாரியைத் திறந்து தாயின் சில ஆடைகள், மெடிகல் பைல் என்பவற்றை எடுத்து அங்கிருந்த பையில் போட்டாள். என்றாலும் இன் னும் தாய் ஸுலைஹாவின் அழுகை நின்றபாடில்லை.

திடீரென ஷாறா இப்படி சொன்னதும் ஸுலைஹாவால் ஜீர ணிக்க முடியவில்லை. மகனுக்கு அழைப்பெடுத்துப் பேசிய பொழுது அவன் என்னென்னவோ கூறிக் கொண்டு போனான். இருந்த துயரம் இரட்டிப்பாகியதே தவிர குறைய வில்லை..

புக் பண்ணிய பிக்மீ கார் வந்து விட்டதாக ரீமாவிற்கு அழைப்பு வர அவளும் தாயை கூட்டிக்கொண்டு புறப் பட ஆயத்தமானாள். ஆனால் தாய் ஸுலைஹா தாங்க முடியாத அழுகை யோடு ஷாறாவின் அருகே சென்று அணைத்து முத்தமிட்டு

“பத்திரமாக இருந்து கொள்” என விம்மலோடு கூறியவளை கைத்

தாங்கலாக பிடித்துக் கொண்டாள் ரீமா.

“பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு” என்பது போல் ஷாறா ஏதோ ஒரு நினைவில் கல்லாக சமைந்திருந்தாள். மெல்ல கைத்தாங்க லாகப் பிடித்துத் தாயைக் காரினுள் ஏற்றியவள் பையையும் எடுத்துக் கொண்டு தாய் அருகில் அமர்ந்து கார்க் கதவைச் சாத்தினாள். எதற்கும் அசைந்து கொடுக்காதவளாக ஷாறா பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் ஸுலைஹாவின் காதுகளில்

மாமி.... நான் அடுத்த மொற வீட்டுக்கு வார நேரம் நீங்க எங்கட வீட்டுல இருக்க வாணாம்..” என்ற மருமகன் றியாலின் வார்த்தைகளும்”

“உம்மா... அவர் சொன்னார்.. தானே... உங்கள போக சொல்லி.. நீங்க போயிருங்க.. இன்டக்கே.. இப் பவே போங்க..” எனச் செல்ல மகள் ஷாறா சொன்ன வார்த்தைகளும் எதி ரொளித்துக் கொண்டிருந்தது..


கண்களில் நீர் வடிந்தோடி நெஞ்சை நனைக்க அவளின் நெஞ் சோரமாய் இரத்தம் கசிய அப்படியே சீட்டில் தலை சாய்த்(ந்)தாள் ஸுலைஹா...

---

# கல்வியே கண் கண்ட தெய்வம்



பாதிமா சுமையா



எழும்பும் வெயிலோடு எழுகிறேன்,
ஏமாற்றத்தில் தினமும் வழிகிறேன்
படிக்க வேண்டும் என்ற ஆசை
பசிக்குள் அழும் எனது நிலை.
நூலின் பக்கம் உறவாய் இருக்க
தரையில் உட்கார்ந்து எழுதி நான்,
தலையில் கனவு சூடிக் கொண்டவள்
நான்.

தண்ணீர் இல்லை சில
நேரத்தில், வெந்நீரில்
கனவு பொங்கி விடும்.
ஊரெல்லாம் தாண்டி
நடைபயணம்,
உயர்வு காண ஆசைப்
பயணம்.
நானும் ஒரு நாள்
உயர வேண்டும்,
என்னையும் பிறர் பாராட்ட வேண்டும்.
ஏழை என்றாலும் எண்ணம் வலிமை,
என்றும் கனவுக்கு நம்பிக்கை
மேன்மை..

# இரவு ஆடைகளைத் தயாரித்துக் கொள்ளல்




சில்மியா ஷாப்டீன் - கண்டி

முதலில் தேவையான (மிமி) அளவுகளை அளந்து கொள்ளுங்கள். தேவையான உயரத்திற்க்கு ஏற்ப துணி யின் அளவினை எடுத்து, அதிலிருந்து கழுத்து ஆழத்திற்கு 1/2 அங்குலமும்-அவசியமான (யோக்) தோற்பட்டை அகலம் மற்றும் மேலும் 1 அங்குலமும் சேர்த்து அவ் அளவிற்கு அளவுகளைக் குறித்துக் கொள்ளுங்கள்.


அதாவது பட்டியின் உயரம் (6+1/2=61/2) குறித்துக் கோடு ஒன்றை வரைக. (யோக்) தோற்பட்டை அகலம் (2”) தோற்பட்டையின் நீளத்திற்குக் கட்டம் ஒன்றை வரையவும். பின்னர் இருபுறமும் 3அங்குலம் உள்ளே அடை யாளம் இட்டு பட்டியின் உயரத்தைக் குறித்துக் கொள்ளவும். பட்டியின் அக லம் 2 அங்குலம் எடுக்கவும். அப்போது நடுவில் மீதமுள்ள இடத்தின் அளவு கழுத்து அகலம் ஆகும்.


இவ்வாறு வரையப்பட்ட அடிப் படை மாதிரியுருவின் இரு புறமும் அக் குள் வட்டமிடுங்கள். பின்னர், கழுத்தை நீங்கள் விரும்பியவாறு சதுர வடிவமாக அல்லது ஏ வடிவத்தில் குறிக்கவும். அதன்படி, தான் விருப்பமான வடிவத் தில் புள்ளிக் கோட்டின் வழியே(யோக்) தோள்பட்டை பகுதியை வெட்டுங்கள். இவ்வாறு இரண்டு துண்டுகளையும் (முன்பகுதி, பின்பகுதி) ஒன்றாக வெட் டுங்கள் (இந்தத் துணியை பாதியாக மடித்து 1/2 மிமீ அடையாளத்தைக் குறிப்பதன் மூலம் மிக எளிதாக வெட்ட லாம். (ஆம் குறிப்பில் காணப்படுவது போல்).

குறிப்பில் காட்டப்பட்டுள்ளதன் படி கீழ்ப் பகுதியை வெட்டுதல்.




அதன் மொத்த உயரத்திலிருந்து (யோக்) தோள்பட்டை உயரத்தைக் கழித்து, மீதமுள்ள உயரத்தின் இரு




மடங்கு துணியை எடுத்து அதை மீண் டும் இரண்டாக மடியுங்கள். மூலையி லிருந்து அங்குலம் உள்ளேயும் கீழும் குறிக்கவும் (உடல் பருமனான பெண் ணாக இருந்தால், சுமார் 4 அங்குலங் கள் குறிக்கவும். மடிப்புக் கோட்டின் வழியே கீழ் (யோக்) தோள்பட்டை அகலத்தை (உயரம்) குறித்து அதை வட்டமிட்டு, வெட்டவும் (3 ஆம் குறிப் பில் போன்று) அதன் விரிக்கப்பட்ட காட்சி புள்ளிக் கோடுகளினால் காட்டப் பட்டுள்ளது.

தைக்கும் முறை

வெட்டிய முன் மற்றும் பின் அத்தோடு (யோக்) தோற்பட்டை துண்டு களை ஒன்றாகத் தைக்கவும். (அவசிய மெனின் அவற்றை இரட்டித்துத் தைக்க லாம்) கழுத்தைச் சுற்றி ஒரு ரேந்தை அல்லது பைபின் பிடித்து தைக்கவும். இரட்டித்துத் தைக்கிறீர்கள் என்றால் கழுத்தைச் சுற்றி கட்மார்க் இட்டு மறு பக்கத்தைத் திருப்பவும். இவ்வாறு கழுத்தைத் தைத்து முடித்ததன் பிறகு, வெட்டியுள்ள கீழ்ப் பகுதியை மடிப்பு (சுருக்கு) வைத்து தைக்கவும். மீண்டும் அக்குள் வட்டத்தை வடிவாக வெட்டி, அதைக் கையின் முகப்பில் வைத்து தைக்கவும். அக்குள் பகுதி பெரிதாக இருப்பின் இரு அக்குள் பகுதியையும் குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி அழகா கத் தைக்கவும். (புள்ளியிடப்பட்ட கோடுகளுடன் காட்டப்பட்டுள்ளது)

# KFC சிக்கன் தயாரிக்கும் முறை



**நௌஷா ஜமால்டீன்**



சிக்கன் லெக் வீங்ஸ் பைல்ஸ்

## தேவையான பொருட்கள்

முட்டை-3
மோர்-1 கப்
மைதா மாவு - 1/2 கப்
கான்பிளார் 1/2 கப்
பாஜி மசாலா1 ஸ்பூன்
மிளகுத்தூள் 1 ஸ்பூன்
மிளகாய் தூள் 2 ஸ்பூன்
உப்பு தேவையான அளவு
எண்ணை deep fry

## தயாரிக்கும் முறை

மோர், முட்டை, மசாலாக்கள், உப்பு எல்லாவற்றையும் நன்றாக சேர்த்து கலந்து சிக்கனையும் அதனுடன் சேர்த்து நன்றாக புரட்டி 2-3 மணி நேரம் ஊற வைக்கவும்.

பின்னர் கான்பிளார், மைதா மாவு, மசாலா இவற்றை கலந்து கொள்ளவும். பின்னர் சிக்கன் துண்டுகளை தனித்தனியாக கான்பிளவர், மைதா, மசாலா கலந்த கலவையுடன் தனித்தனியாகப் புரட்டி பொரித்து எடுக்கவும்.

பின்னர் பொரித்து எடுத்த சிக்கன் பீஸ்களை பெரிய பவுலில் சேர்த்து KFC bucket ஸ்டைலில் பரிமாறவும்.

## அலசல்

**ஜெஸ்மின் நமீஸ்**
**காத்தான்குடி**



# அழகு

நபீலா : என்ன சியாமா மதினி ஏதோ பேசணும் எண்டு கூப்பிட்டுட்டு ஒண்டுமே பேசாம இருக்கிறீங்க?

சியாமா : ஓ... பேசணும் எண்டு கூப்பிட்டதான் மதினி. ஆனா எங்க இருந்து எப்பிடி தொடங்கிறதெண்டு விளங்குதில்ல.

நபீலா : பரவால்ல மதினி சொல்லுங்க.

சியாமா : அது இல்ல... மதினி... அது வந்து.... இல்ல... அது... (அழுகிறாள்)

நபீலா : மதினி ஏன் அழுறீங்க சொல்லுங்க.

சியாமா : அது உங்க நாநா இப்ப கொஞ்ச நாளாவே என்னோட நல்லா இல்ல. சந்தோஷமா இல்ல. நாங்க நல்லா சிரிச்சிப் பேசி ரொம்ப நாளாச்சு.

நபீலா : ஏன் மதினி என்ன ஏதும் பிரச்சினையா?

சியாமா : சீச்சீ அதெல்லாம் ஒரு பிரச்சினையுமில்ல.

நபீலா : பின்ன ஏதும் குறையா மதினி?

சியாமா : சீச்சீ அல்லாஹ்ட உதவியக் கொண்டு ஒரு குறையுமில்ல.

நபீலா : பின்ன என்ன மதினி?
சியாமா : கொஞ்ச நாளாவே அவரு என்னோட சிரிச்சிப் பேசுறது, அன்பா பழகுறது எதுவுமே இல்ல. எனக்கு என்ன காரணம் எண்டும் விளங்குதில்ல. எண்ட முகத்தக் கூட பாத்துப் பேசுறாரில்ல. தான் உண்டு தன் வேல உண்டு எண்டு திரியிறாரு. என்னக் கவனிக்கிறதில்ல. நான் சாப்பிட்டேனா தூங்கினேனா என்ன செய்யிறன் ஏது செய்யிறன் எண்டு என்னில ஒரு அக்கறையும் இல்லாம இருக்காரு.

நான் நல்லது செஞ்சா என்ன பாராட்டுறதும் இல்ல. ஏதும் பிழ செஞ்சா என்ன ஏசுறதும் இல்ல. எனக்கும் நாப்பது வயசாகி நரை முடியும் ஒண்டுரெண்டு வந்துட்டு. எண்ட இளமை அழகு எல்லாம் குறைஞ்சு கொண்டு போனதால அவருக்கு என்னுல இருக்கிற ஈடுபாடு குறைஞ்சிட்டு வருதோ எண்டு எனக்கு கவலயாயிருக்கு. ( அழுகிறாள் )

நபீலா : சீச்சீ அப்பிடி எல்லாம் இருக்காது மதினி. நீங்க கவலப்படாதீங்க. அழாதீங்க.

சியாமா : ஒரு வேள அவருக்கு வேற யாரயும் பிடிச்சிட்டோ.... என்ன விட இளமையா அழகா இருக்கிற பெண்ண விரும்புறாரோ.... இப்படி எல்லாம் மனசு கிடந்து யோசிச்சிட்டுக் குழப்பமாயிருக்கு.

நபீலா : சீச்சீ என்ன மதினி இது இப்படி எல்லாம் யோசிக்கிறீங்க. உங்களுக்கு என்ன குற. நீங்க அழகா தான் இருக்கீங்க. அப்படி நாநா வேற யாரோடயும் பழகுவது போல உங்களுக்கு ஏதும் சந்தேகம் இரிக்கா? அத ஊர்ஜிதம் செய்யிற மாதிரி ஏதும் ஆதாரம் இரிக்கா? அவரு வேற யாரோடயும் போன் பேசுறாரா? இல்லாட்டி வீட்டடைமுக்கு வராம வெளியே எங்கேயும் சுத்துறாரா?

சியாமா : அப்பிடி ஏதும் இல்ல போல தான் இருக்கு. ஆனா இருக்கும் போல யும் இருக்கு. அப்பிடி எதுவும் இல் லாட்டி ஏன் என்னோட முன்ன போல கதைக்கிறாரில்ல? நானும் கதைக்க கிட்ட போனாலும் அதக் கணக்கில எடுக்காம போயிட்டே இருக்காரு. ஒரு வேளை என்ட இளமையும் அழகும் குறைஞ்சிட்டு போறது தான் காரணமா இருக்குமா?

நபீலா : நீங்க சொல்றதில இருந்து எனக்கு ஒண்டு மட்டும் விளங்குது மதினி. நீங்க வீணா குழப்பத்தில இருக்குறீங்க எண்டு. எதுக்கும் கொஞ் சம் டைம் தாங்க. இது பத்தி நான் நாநாகிட்ட பேசிட்டு வாறன். நாநா எங்க இருக்காங்க?

சியாமா : அடுத்த ரூம்ல இருக்காங்க.

நபீலா : சரி நான் பேசிட்டு வாறன். அவர்கிட்ட என்ன பிரச்சின எண்டு கேட்டுட்டு வாறன்.

சியாமா : சரி மதினி.

நபீலா : சியாமா மதினி... மதினி... என்ன அதுக்குள்ள தூங்கிட்டீங்களா ?

சியாமா : ஓ.... மதினி... கொஞ்சம் கண் அசந்துட்டன். என்ன பேசினீங்களா? நாநா என்ன சொல்றாங்க?

நபீலா : மதினி... இஞ்ச வாங்க... இப் படி வாங்க... இப்படி... இங்க கண்ணா டிக்கு முன்னுக்கு வந்து நில்லுங்க... உங்கள ஒரு தரம் பாருங்க. கண்ணா டில பாருங்க. நல்லாப் பாருங்க.

சியாமா : ஆ... பாத்துட்டன். இப்ப என் னத்துக்கு கண்ணாடி பாக்க சொன் னீங்க?

நபீலா : என்ன மதினி இது? சாயம் போன ஒரு ஹவுஸ் கோட்... தலை முடிய சரியா வாரிக் கொள்ளயுமில்ல. முடியெல்லாம் காத்துல பறக்குது. முகத்துல எண்ணெய் வடியுது. வியர்வ வாசம் வேற.

சியாமா : என்ன செய்யுற மதினி. வீட்டு வேல... பிள்ளைகள்ட வேல... சமக்கிற வேல... இப்படி பகலெல்லாம் வேல செஞ்சு களச்சிப் போற நமக்கு இதெல்லாம் கவனிக்க எங்க நேரம் இரிக்கு ?

நபீலா : என்ன மதினி இப்படி சொல் றீங்க... என்னதான் வேல இருந்தா லும்... நம்மள நாம கவனிக்க வேணாமா? எல்லா வேலயும் முடிச்ச தும் நம்ம கணவன்மார் வீட்டுக்கு வாற நேரம் குளிச்சு ஒரு புது உடுப்பு உடுத்து லேசான மணம் பூசி தலை முடிய வாரி கட்டி இருந்தாத்தானே நம்ம கணவன் மாருக்கு நம்ம மேல ஒரு ஈர்ப்பும் ஆசையும் வரும் ?

சியாமா : அதெல்லாம் கல்யாணம் செஞ்ச புதுசுல இருந்தோம் இப்ப அப் படியா வீட்டுல வளர்ந்த பிள்ளங்க இருக்காங்க...

நபீலா : என்ன மதினி இப்படி பேசு றீங்க. நமக்கு வளர்ந்த பிள்ளங்க இருந்தா என்ன? கணவனுக்கு பணி விடை செய்யிறதும் அவங்களுக்காக நம்மள அழகு படுத்திக் கொள்றதும் இஸ்லாம் அனுமதிச்சது தானே... எப்போதும் அழகா சுத்தமா புன் சிரிப்போட இருந்தா எந்த கணவனுக்கு தான் மனைவில ஈடுபாடு வராது.

சியாமா : அதுவும் சரிதான்... அப்ப அவரோட பிரச்சின இதுதானாமா?

நபீலா : ஓ.... மதினி நீங்க நினைக்கிற மாதிரி அழகும் இளமையும் குறைஞ்

சதால நாநா உங்கள கவனிக்கிறத விடல. அது உங்க மனசுல எழுந்த குழப்பம் மட்டுந்தான்... நரமுடி வந்தா என்ன நட தளர்ந்து போனா என்ன உண்மையான அன்பு உள்ள கணவன் மாரு எப்பயும் நம்மல விட்டுப் பிரிஞ்சு போக மாட்டாங்க. ஆனா.. போயிட்டு எண்ட கவலையில உங்கள நீங்க கவனிக்கிறத விட்டுட்டீங்க. அதனால தான் நாநா உங்கள விட்டுத் தள்ளிப் போயிருக்காங்க. மதினி... இப்புடியே போயிட்டிருந்தா நாளடைவில மனசுல விரிசல் உண்டாகி குடும்பத்துல பெரிய பிரச்சனைகளும் குழப்பங்களும் உருவாகிடும். சோ... நான் சொல்றது உங்களுக்குப் புரியுதா ?

சியாமா : ஓ... நல்லாப் புரியுது. நல்லாப் புரியுது. நான் போய் என்ன அழகுக்ஷபடுத்திட்டு வாறன்.

நபீலா : அப்ப சரி... எனக்கு இங்க இனி வேல ஒண்டுமில்ல. நான் போயிட்டு வாறன். (சிரிக்கிறார்கள்)

முற்றும்

# கைவண்ணங்கள்



## சுசானா முனாஸ்



# அவரி செய்திகள்.

**தொடர்ந்து இப்பகுதியில் அரச சார்புடைய விருதுகள் பெற்றோர், போட்டிகளில் வெற்றி பெற்றோர், பதவி உயர்வுகள் பெற்றோர் மற்றும் அரச திணைக்களங்களால் சிறப்புப் பெற்றோர் பற்றிய தகவல்கள் வெளிவரவுள்ளன. நீங்களும் தெரியப்படுத்தலாம்.**



## கமர்ஜான் பீபீக்கு விஸ்வாபிநந்தன விருது

. கடந்த 22.11.2025 அன்று சிறீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தில் கலாசார அமைச்சின் அனுசரணையுடன் கம்பஹா மாவட்டத்திற்கான விஸ்வாபிநந்தன விருது விழா இடம்பெற்றது. இதன்போது கம்பஹா மாவட்டத்தின் நூறு கலை இலக்கிய ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்கிடையே எமது சிறீலங்கா பென்கிளப் நிர்வாக சபை அங்கத்தவரும் சிரேஷ்ட எழுத்தாளருமான ஹுனுப்பிட்டி எஸ் யூ கமர்ஜான் பீபீ தனியொரு முஸ்லிம் பெண்ணாக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

## ஹாஜறா தேசிய மட்டத்தில் சாதனை.




புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய இலக்கிய விருது வழங்கும் விழா 2026 ஜனவரி மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்லை இசுருபாய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இத் தேசிய இலக்கிய விழாவில் கடந்த 2024 ம் ஆண்டு கலாசார அலுவல்கள் பண்பாட்டு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மரபுக் கவிதை திறந்த போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாமிடம் பெற்று வெற்றி பெற்றமைக்காக எமது அமைப்பின் உறுப்பினரான காத்தான்குடி ஹாஜறா கலீலுர் ரஹ்மான் பதக்கம், சான்றிதழ், பணப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார் .

# கலைஞர் சுவதம் விருது பெற்றார்

எமது அமைப்பின் நிகழ்ச்சி நாள் தலைவர்களுள் ஒருவரான முகம்மட் றபீக் ஜகி பானு கடந்த 2025.12.22 அன்று சாய்ந்த மருது பிரதேச கலைஞர் ஒன்று கூடலின் போது கலைஞர் சுவதம் விருது பெற்றார். கவிதைகள் சிறுகதைகள் எழுதிவரும் இவர் பானு ஜிப்ரி என்ற பெயரில் எழுதி வருகிறார்.



சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம் எம் ஆஷீக் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி எம் ரின்ஸான் இவ்விருதினை அவருக்கு வழங்கி வைத்தார்.

# ஆக்க இலக்கியப் பயணம் - 2025

இலங்கை இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பங்களிக்கக் கூடிய புதிய தலைமுறை எழுத்தாளர்களை வளர்க்கும் நோக்கத்துடன் அரச இலக்கியக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கைக் கலை கழகம் ஆகியவை இணைந்து “ஆக்க இலக்கியப் பயணம் - 2025 ” என்ற தலைப்பில் அகில இலங்கை ரீதியில் படைப்பிலக்கியப் போட்டியொன்றை நடாத்தினர். இதில் அரச கரும மொழிகளான சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் என மும்மொழிகளிலும் கவிதை/சிறுகதை என இரண்டிலும் நடந்தப்பட்டன.

மும்மொழிகளிலும் வெற்றி ஈட்டியவர்களுக்கான பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் கடந்த 2025ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் திகதி புத்தசாசன அமைச்சின் கேட்போர் கூடத்தில் விமர்சையாக நடைபெற்றது.



இப்போட்டித் தொடர்களில் சிறுகதை தமிழ்ப் பிரிவில் எமது அங்கத்தவரான தர்ஹா நகர் றம்ஸியா ஹம்ஸா மூன்றாம் இடம்பெற்று பணப் பரிசினையும் சான்றிதழையும் பெற்றார்.

# இவ்விதழின் ஆளுமை

# ஆளுமையுடன் ஓர் ஆரோக்கிய சந்திப்பு

***செவ்வி கண்டவர் - ஷாமென் நிஸாம்டீன் - கட்டுகஸ்தோட்டை***






தமிழ் இலக்கியத்திற்கென தொன்மையான வரலாறு இருந்தாலும் சர்வதேச ரீதியில் இந்தியாவிற்கு அடுத்தபடியாக இலக்கியத்திற்கென தனி இடம் பிடித்திருப்பதில் இலங்கை முதலிடம் பெறுகிறது.. இலங்கையில் 14 ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய ஆரம்பம் விடுதலை, சுதந்திர தாகம், முற்போக்கு என்ற ரீதியில் இருந்தன.

பின்பு 1980ல் மண்வாசனையோடு சூழலுக்கு ஏற்ப படைப்புகள் வெளிவரத் தொடங்கின..

1970களில் பல படைப்பாளர்களின் தோற்றம். அதிலும் குறிப்பிடக்கூடிய முஸ்லிம் பெண் படைப்பாளிகளில் ஒருவராக கலா பூஷணம் திருமதி மஷூறா சுஹூறுதீன் காணப்படுகிறார்.. கிழக்கிலங்கையின சம்மாந்துறையை பிறப்படமாகவும் தற்போது மருதமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 1979 மஷூறா ஏ மஜீத் என்ற பெயரில் வானொலி, தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்திலும் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், பாடல், வில்லுப் பாடல், பிறை பாடல், பேச்சு, சித்திரம், கைப்பணி, சஞ்சிகை வெளியீடு என பல துறைகளிலும் தடம் பதித்தவர்.

நதிகளின் தேசிய கீதம் என்னும் கவிதை நூலின் ஆசிரியர் 63 முஸ்லிம் பெண் கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய சுட்டு விரல் என்னும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் முதலாவது கவிதை தொகுப்பு, 22 பேரின் மொழிபெயர்ப்பு கவிதைகளான இமயம் தழுவும் இறக்கைகள் என்ற தொகுப்பு உலகம் முழுதும் எங்கள் கதைகள் என்ற 16 சிறுகதைகளின் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்..

படைப்பாளனின் அனுபவத் தன்மை, செறிவு, மனித உறவு, முயற் சித்திறன் ஆகியவற்றின் சேர்க்கையே சிறந்த படைப்பாகிறது என்பதற்கமைய இவருடைய ஆக்கங்களும் மிகவும் காத்திரமானவையாகவே உள்ளன..

இலக்கியத்தை தாண்டி இவர் ஒரு முன்னாள் ஆசிரியராக இருந்த பொழுது நாடகங்களை எழுதி பயிற்றுவித்து அகில இலங்கை ரீதியில் இரண்டாம், மூன்றாம் இடங்களில் பெற்றுக் கொண்டது மாத்திரமன்றி குருளைச் சாரணியத்தின் மாவட்ட தலைவியாக பின்பு மாவட்ட சாரணர் அமைப்பினால் கௌரவிப்பு மற்றும் சென்ஜோன் அம்புயூலன்சின் அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட உதவி ஆணையாளராக செயல்பட்டு சர்வதேச சேவை விருதும், காரைதீவு

கல்விக் கோட்ட சுற்றாடல் முன்னோடி அணையாளராக இரு தடவைகளும் கல்முனை கல்வி வலய சுற்றாடல் முன்னோடி ஆணையாளராக மூன்று வருடங்களும், 2007ல் ஜனவ போத கேந்திரேயா சர்வதேச அமைப்பினால் நாடக தயாரிப்பிற்காக அகில இலங்கை மட்ட விருதும், 2014இல் பாடசாலை இணைப் பாடவிதான செயல்பாடுகளுக்காக கல்வி அமைச்சின் ஆசிரியர்களுக்கான பிரதீபா பிரபா விசேட தேசிய விருதும், 2014ல் பாடசாலை சுற்றாடல் சேவைக்காக சுற்றாடல் அமைச்சின் ஆசிரியர்களுக்கான சுற்றாடல் நேய தேசிய விருதும்,

2017ல் கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய கலைஞர் சுவதம் விருதும், கிழக்கு மாகாண கலாச்சார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தால் இலக்கியத்திற்கான வித்தகர் விருது 2023 இலும் இலக்கியத்திற்காக சர்வதேச விழித்தெழு பெண்ணே அமைப்பின் விருது 2024லும் என 15க்கும் மேற்பட்ட விருதுகளை பெற்றவரும் ஸ்ரீலங்கா பென்கிளப் என்னும் அமைப்பின் ஸ்தாபகருமான கலாபூஷணம் திருமதி மஷூறா சுஹூறுதீன் அவர்களை வாழ்த்தி அவரி ஆளுமை பகுதிக்கு வரவேற்கின்றோம்..

**கேள்வி:1**

**அஸ்ஸலாமு அலைக்கும், முதற்கண் இலக்கியவாதிகளின் கனவான கலாபூஷணம் விருது பெற்ற உங்களை எமது அமைப்பின் சார்பில் வாழ்த்தி வரவேற்கின்றோம்..**

இலக்கிய உலகில் பிந்திய 70களில் எழுதத் தொடங்கி மிக நீண்ட பயணம் வந்துள்ளீர்கள்.. அதற்கிடையில் கலைஞர் சுவதம், வித்தகர் விருது பிரதீபா பிரபா உட்பட சுமார் 14 விருதுகளையும் பெற்றுள்ள உங்களின் ஆரம்ப கால சவாலான இலக்கிய அனுபவங்களை கூறுங்கள்..

பதில்: சவால்களை சமாளிக்கும் ஆற்றல் என் சிறுபராயத்திலிருந்தே காணப்பட்டது. எனது பாடசாலைக் காலம் முழுமையாகவும் நான் இருட்டடிப்பிற்குள்ளேதான் தள்ளப்பட்டிருந்தேன். நான் என்னைச் செதுக்கிக் கொள்ளவும் இந்த இருட்டடிப்புதான் முதன்மைக்காரணம். அவையெலலாம் தனியொரு நூலாக எழுத வேண்டிய அனுபவங்கள். உதாரணமாக பாடசாலைக் காலத்தில் எனக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பத்திரிகை ஆசிரியர் பொறுப்பு மறுதலிக்கப் பட்டதால் உயர்தரம் படிக்கும்போதே நிறைமதி என்ற காலாண்டு கையெழுத்து சஞ்சிகையை ஆரம்பித்தேன். அது நடளாவிய ரீதியில் பேசப்பட்டது. இறுதி இரண்டு றோணியோ பிரதியுட்பட 22 பிரதிகள் வந்தன. சம்மாந்துறையின் முதலாவது பெண் பத்திரிகையாளரும் நானே. இன்றுவரை சவால்களைத்தான் எதிர்கொள்கிறேன்.




**கேள்வி:2**

**பன்முக திறமைகளை பெற்ற அதாவது கவிஞர், எழுத்தாளர், பாடலாசிரியர், ஓவியர், சஞ்சிகை ஆசிரியர், நாடகாசிரியர், கைப்பணியாளர், பேச்சாளர், அரச அங்கீகாரம் பெற்ற அமைப்பின் ஸ்தாபகர் என்ற பல பரிணாமங்களில் மின்னும் உங்களின் திறமைக்கு ஊன்றுகோலாய் இருந்தது, இருப்பது எவை என கூற முடியுமா..**

பதில் : முதற்கண் இறைவனின் அருட்கடாட்சம். எனது தீவிரமான தன்னம்

பிக்கை. எந்த அநாவசிய தடைகளையும் விதிக்காமல் என் ஆற்றலில் தாமும் மகிழ்ச்சியனுபவித்த பெற்றோர். தோள் கொடுத்த கணவர். எத்தனை அழுக்காறு மிகுந்த இலக்கியப் பரப்பில் மிக நீண்ட காலம் பயணித்திருக்கிறேன் என்பதை எண்ணி நானே என்னை வியக்கிறேன். என்னைச் சுற்றி நடக்கும் தடைகள் குரோதங்கள் பயமுறுத்தல்கள் முட்டுக்கட்டைகள் எதையும் நான் சட்டை செய்ததில்லை. அவற்றை ஒரு பொருட்டாக எண்ணியதேயில்லை. இடறுவதை காலால் தள்ளிவிட்டு கடந்து வந்தவள் நான்.

**கேள்வி:3**

**அன்றைய நாட்கள் போல் அல்லாது இன்றைய தலைமுறைக்குகளங்கள் காளான்கள் போல் முளைத்து கொண்டுள்ளன.. அதே சமயம் விருதுகளும் விலை பேசப்படுகின்றன.**



**இது பற்றி உங்கள் கருத்து என்ன..?**

பதில்: பெரும்பாலான களங்களும் காத்திரமானதாயில்லை. அதனால் படைப்புகளும் காத்திரமானதாயில்லை. ஒட்டு மொத்தமாய் அனைவரையும் சொல்லிவிட முடியாது. இலக்கியமும் வியாபார சந்தையாகி விட்டது. இரண்டு கவிதை முகநூலில் வந்தாலே விருதினை எதிர் பார்க்கிறார்கள். விருது வியாபாரிகளுக்கும் நல்ல உழைப்பு. இவற்றை யார் சுட்டிக்காட்டினாலும் எதிரியாக நேரிடும். அதைப் பற்றி நாம் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை. இத்தகைய செயற்பாடுகளுக்கு ஆயுளில்லை. காத்திரமான படைப்புகளும் செயற்பாடுகளும் காலம் கடந்தும் வாழும்.

**கேள்வி: 4**

**நான்கு வரிகளில் உடைத்து எழுதி விட்டால் புதுக்கவிதை என்ற மாயையில் இன்றைய இலக்கியவாதிகள் உருவாகிக் கொண்டுள்ளனர்.. மரபுக் கவிதை மாண்டு விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது.. நாலு கவிதை எழுதி விட்டால் காத்திரமில்லா கவிதை புத்தக வெளியீடு என்ற தொனியில் இலக்கியப் பாதை சென்று கொண்டுள்ளதை காணும் பொழுது அதனை சீர் செய்ய இலங்கையின் இலக்கிய உலகம் காட்ட வேண்டிய பாதை ஏதாவது உண்டா..?**

பதில்: இது காலத்தின் தேவையாகி விட்டது. நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் புதியவர்களுக்கு சரியான வழியைக்காட்டும் கடமை சிரேஷ்ட எழுத்தாளர்களுக்குண்டு. அமைப்பு ரீதியாகவோ தனிப்படவோ அவர்களை சரியாக வழிப்படுத்தினால் அவர்களும் சிறந்த படைப்பாளிகளாக உருவாக முடியும். இதனை அடிப்படையாக கொண்டே ஸ்ரீலங்கா பெண்கிளப் தமது அங்கத்தவர்களை பயிற்சிப் பட்டறைகள் மூலமாகவும் பயிற்றுவிப்பு மூலமாகவும் மேம்படுத்தி வருகிறது. வெற்றியும் கண்டுள்ளது.

**கேள்வி: 5**

**பேனை பிடித்தவரால் உலகை மாற்றலாம்.. என்ற கருத்து நிலவுகிறது. அது ஊடகவியலாளர்களுக்கா.. இலக்கியவாதிகளுக்கா சிறப்பாக பொருந்துகிறது.. இவ்விடயத்தை பேனையின் தாட்பரியத்தை விளக்குவீர்களா...?**

பதில் : இருவருக்கும் பொருந்தும். ஆனால் பேனை மூலமாக உயரிய சிறந்த மாற்றத்தை உருவாக்குபவனே

சமூகப் பொருத்தப்பாடுள்ள இலட்சிய வாதி. இலட்சிய எழுத்துக்கள்தாம் பவித்திர மானவை என்றாலும் மலினப் பட்ட இலக்கியங்களும் கைதட்டல்க ளைப் பெறுகின்றன. ஆனால் அதற்கு ஆயுள் குறைவு. பெரும்பாலும் இவற் றிற்கான உதாரணங்களை முகநூலில் காணலாம். பெண்ணை வர்ணித்து யாரையாவது நையாண்டி பண்ணி யாரையாவது சாடி அல்லது விரசமாக பதிவிடப்படும் இலக்கியங்கள் கைதட் டுக்களை அள்ளிக் கொள்கின்றன. ஆனால் காத்திரமான படைப்புகள் கண்டு கொள்ளப் படுவதில்லை. அது வாசகர்களின் இரசனைத் தரத்தைப் பொறுத்ததும் தான். சில படைப்புகளை நாம் வாசிக்கும்போது அந்தப் பாத்திர மாகவே நம்மை மாற்றிக் கொள்ள விரும்புகிறோமில்லயா? அவை இலட் சிய பாத்திரங்களாயிருக்கும். ஒரு வாச கனின் நல்லுணர்வினையும் தீய உணர் வினையும் கிளறிவிட பேனையால் முடி யும்.

**கேள்வி: 6**

**ஒருவனுக்கு இலக்கு முக்கியமானது.. அவ்வகையில் நீங்கள் எழுதத் தொடங்கிய பொழுதே இவ் இலக்கை நோக்கி பயணித்தீர்களா அல்லது இக்கனவு இடையில் வந்ததா.. உங் கள் பதில் இன்றைய படைப்பாளிக ளுக்கும் வழிகாட்டட்டும்..**

பதில் : எழுதவாரம்பித்தபோது நானும் எல்லோரையும் போல் என் பெயர் வர வேண்டுமென்று. ஒரு பொழுது போக் காகவே ஆரம்பித்தேன். ஆரம்பித்த போதே என் படைப்புகளில் பெண்க ளின் பிரச்சினைகள்தான் பிரதிபலித் தன. நான் இதை திட்டமிட்டு எழுதிய தில்லை. மிக நீண்ட காலத்தின் பின் தான் விமர்சகர்களின் சுட்டிக்காட்டல் மூலம் நான் பெண்களின் பிரச்சினை களை எழுதுகிறேன் என்பதை உணர்ந்து கொண்டேன். அதை தாண்டி நான் சிந்திக்காதபடி என்னை யறியாமலே எனக்குள் பெண்களின் பிரச்சினைகள் உள்வாங்கப்பட்டிருந் தன. எனவே பெண்களின் பிரச்சினைக ளுக்காகவே எனது பேனையை பயன் படுத்துவதென தீர்மானித்துக் கொண் டேன்.

**கேள்வி:7**

**இலங்கையில் தமிழ் இலக்கிய உல கம் எவ்வாறு உள்ளது.. கைதூக்கி தட்டிக்கொடுக்கிறதா? அல்லது கைநழுவ விட்டு வேடிக்கை பார்க்கி றதா?**

இலங்கையில் தமிழ் மூத்த இலக்கிய படைப்பாளிகள் ஏனைய படைப்பாளிக ளோடு எவ்வாறு உள்ளனர்? தட்டிக் கொடுத்து ஊக்கம் கொடுப்பவர்களா கவா? தட்டிக் கழித்து கழட்டி விடுபவர் களாகவா?

பதில் : கொஞ்சம் சிக்கலான கேள்வி தான். எனது பதில் பலருக்குப் பிடிக் காது. வெகு வெகு சிலரைத் தவிர பெரும்பாலானோர் தங்களை மட்டும் வளர்த்துக் கொள்வதையே இலட்சிய மாகக் கொண்டுள்ளனர். இன்னொரு எழுத்தாளன் என்ன தவறு விடுகிறான். அதை வைத்து அவனை எவ்வாறு வீழ்த்தலாம் என்பதிலேயே குறியாயி ருக்கின்றனர். மூத்த படைப்பாளிகளும் விதிவிலக்கல்ல. இளையவர்களை கைதூக்கி விட வேண்டிய தார்மீகப் பொறுப்பு மூத்த படைப்பாளிகளுக்கு இருக்கிறது. மற்றவர்களை நையாண்டி செய்வதிலும் வாய்ப்புகளைத் தட்டி விடுவதிலும் சுய மகிழ்ச்சியடையும் மனநோய் இவர்களுக்கிருக்கிறது. அடுத்தவர்களுடைய ஆற்றலை அல் லது உழைப்பை வைத்து தான் புகழ் பெறும் அற்ப எண்ண முடையவர்க ளும் இருக்கிறார்கள். இறைவன் ஒரு வருக்கு நாடுகின்றவற்றை தட்டிவிட எவராலும் இயலாது. அடுத்தவரை கை தூக்கி விடும் மூத்த படைப்பாளிகளும் எம்மிடை இல்லாமலில்லை.

**கேள்வி:8**

**இலங்கையின் முதலாவது இஸ்லாமிய பெண்களின் இலக்கிய அமைப்பான Sri Lanka Pen Club இன் ஸ்தாபகரான உங்களுக்கு வாழ்த்துக்கள். அவ்வமைப்பு பற்றி சற்று கூறுங்கள்..**

பதில் : இந்த அமைப்பு ஆற்றலுள்ள பெண்களின் ஆற்றல்களை மேம்படுத்தவும் வழிகாட்டவுமானது. அதை இது வரை செவ்வனே செய்து வருகிறது. நிகழ்ச்சிகள் பயிற்சிப் பட்டறைகள் மூலம் மட்டுமன்றி பென்கிளப் அவரி என்ற காலண்டு சஞ்சிகையை வெளியிட்டு களம் கொடுத்து படைப்பாளர்களையும் உருவாக்கி வருகிறது. 2023 இல் கிழக்குமாகாண பண்பாட்டலுவல்களின் சாகித்திய விருது அவரிக்கு கிடைத்ததே நம் படைப்பாளிகளுக்கான அங்கீகாரம்தான். ஒரு மரத்தை நாடி பறவைகள் வருகின்றன. இளைப்பாறுகின்றன. தனது தேவைகளைப் பெறுகின்றன. தேவை முடிந்தும் பறந்து போய் விடுகின்றன. இந்த அமைப்பும் இவ்வாறானதொரு விருட்சம்தான். தங்களை வளர்த்துக் கொண்டு தாங்கள் பிரபல்யமானதும் போய்விடுகின்றனர். மரங் கொத்திகளாய் மரத்தை பதம் பார்ப்பவர்களுமுண்டு. அதற்காகவே இந்த அமைப்பு மரம் எந்தப் பறவைகளிடமும் பிரதியுபகாரம் எதிர்பார்ப்பதில்லை.

**கேள்வி: 9**

**வெற்றிகரமான ஐந்து மாநாடுகளை நடத்தி முடித்துள்ளீர்கள். அது பற்றியும் உங்கள் அமைப்பின் எதிர்கால திட்டங்கள் பற்றியும் எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்..?**

பதில் : மாநாடு என்பது அமைப்பின் அங்கத்தவர்கள் நேரில் சந்தித்து மகிழ்ச்சியும் ஊக்கமும் பெறுவதற்கான வாய்ப்பு. ஒரு குடும்ப ஒன்றுகூடல் போல. எதிர்கால திட்டங்கள் காத்திரமானவையாக இருக்கும். வெளிப்படையாக கூற முடியாது. சொல்லிச் செய்வர் சிறியர். சொல்லாமற் செய்வர் பெரியார். சொல்லியும் செய்யார் கயவர் என்பார்களல்லவா?

**கேள்வி :10**

**மூத்த கலைஞரான உங்களிடம் இறுதியாக, எமது இளைய படைப்பாளர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை..**

பதில் : அடுத்தவர்கள் கைதூக்கி விடுவார்கள் என்றெல்லாம் நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. உங்களுக்கான வியூகங்களை நீங்களே அமைத்துக் கொள்ள வேண்டும். அடுத்தவர்களின் உயர்ச்சி பற்றியெல்லாம் சிந்தித்து காழ்ப்புணர்ச்சிகளை வளர்த்துக் கொள்ளாதீர்கள். அதனால் நீங்கள்



அடுத்த படியில் கால் வைக்க நேரம் தராது. உலகம் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீதான் நீதிபதி. ஆற்றல்களை வளர்ப்பதற்காக குடும்பக் கட்டமைப்பை மிதியாதீர்கள். மார்க்க வரம்பை மீறாதீர்கள். இவை உங்கள் சமூகப் பெறுமானத்தை இழிவாக்கும். சமூகப் பொருத்தப் பாட்டோடு இயைந்து செல்வதே ஒரு சிறந்த ஆற்றல்தான்.

# MICROSOFT BING IMAGE CREATOR

## (மைக்ரோசாப்ட் பிங் இமேஜ் கிரியேட்டர்: உருவாக்க செயற்கை நுண்ணறிவு)



பிங் இமேஜ் கிரியேட்டரின் செயல் பாட்டுக்குத் தொழில்நுட்ப ரீதியாக மூன்று முக்கியக் கூறுகள் அடிப்படை யாக உள்ளன. அவை கிளிப் (CLIP) உரை குறியீடாக்கி, A-நெட் (U-Net) மற்றும் மாறுபாட்டு தானியங்கி குறி யீடாக்கி (VAE) ஆகும். ஒரு பயனர் ஒரு விவரிப்பை வழங்கும்போது, கிளிப் மாதிரியானது அந்த உரையின் பொரு ளைப் புரிந்து கொண்டு, அதற்குப் பொருத்தமான காட்சிப் படிமங்களுடன் அதை ஒப்பிடுகிறது. இது பல மில்லி யன் கணக்கான படங்கள் மற்றும் அவற்றின் தலைப்புகளைக் கொண்டு பயிற்சியளிக்கப்பட்ட ஒரு மாதிரியா கும், இது உரைக்கும் படத்திற்கும் இடையிலான தொடர்பை உறுதி செய் கிறது.

அடுத்த கட்டமாக, A-நெட் (U-Net) என்பது ஒரு சிற்பியைப் போலச் செயல்படுகிறது. இது தொடக்கத்தில் ஒரு தெளிவற்ற இரைச்சல் (Noise) நிறைந்த படத்திலிருந்து தொடங்கி, கிளிப் வழங்கிய அறிவுறுத்தல்களின் அடிப்படையில் அந்த இரைச்சலைச் சிறிது சிறிதாக நீக்கி, தெளிவான படி மத்தை உருவாக்குகிறது. இந்த செயல்முறைல "பரவல்" (Diffusion) என்று அழைக்கப்படுகிறது. இறுதியாக, விஏஇ (VAE) என்பது உருவாக்கப்பட்ட அந்த நுட்பமான மறைநிலை (Latent) படிமத்தை உயர்தர தெளிவுத்திறன் கொண்ட ஒரு முழுமையான படமாக மாற்றுகிறது. இத்தகைய சிக்கலான கணிதக் கணக்கீடுகள் நொடிப் பொழுதில் மைக்ரோசாப்டின் கிளவுட் சேவையகங்களில் நிகழ்த்தப்படுவ தால், பயனருக்கு உடனடி முடிவுகள் கிடைக்கின்றன.

பயனர்கள் ஒரு அறிவுறுத் தலை உள்ளிடும்போது, டால் - இ 3 மாதிரி பொதுவாக நான்கு வெவ்வேறு படத் தேர்வினை வழங்குகிறது. ஜிபிடி-4X (GPT-4o) மாதிரியைப் பயன்படுத் தும்போது ஒரு நேரத்தில் ஒரு படம் மட் டுமே உருவாக்கப்படுகிறது, ஆனால் இது அதிகப்படியான துல்லியத்தையும் படத்தைத் திருத்தும் வசதியையும்

வழங்குகிறது. படங்களை உருவாக்கும்போது பயனர்கள் பின்பற்ற வேண்டிய சில வரம்புகளும் உள்ளன. ஒரு 24 மணிநேர காலப்பகுதியில் 200 அறிவுறுத்தல்கள் வரை மட்டுமே ஒரு கணக்கிலிருந்து உள்ளிட முடியும். இது சேவையகத்தின் சுமையைக் குறைக்கவும் முறையற்ற பயன்பாட்டைத் தடுக்கவும் உதவுகிறது.

படங்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், ஏற்கனவே உள்ள படங்களை மாற்றி அமைக்கும் "ரீமிக்ஸ்" (Remix) வசதியையும் பிங் வழங்குகிறது. ஒரு பயனர் தனது சொந்தப் படத்தைப் பதிவேற்றி, அதில் சில மாற்றங்களைச் செய்யக் கோரினால், ஜிபிடி-4ஓ மாதிரி அந்தப் படத்தின் தன்மையைச் சிதைக்காமல் மாற்றங்களைச் செய்கிறது. எடுத்துக்காட்டாக, ஒருவரது புகைப்படத்தின் பின்னணியை மாற்றுவது அல்லது அவரது ஆடையின் நிறத்தை மாற்றுவது போன்ற பணிகளை இது செவ்வனே செய்கிறது.

## தரமான படங்களை உருவாக்குவதற்கான உத்திகள்

ஏஐ வரைகலையில் ஒரு சிறந்த படத்தைப் பெறுவதற்கு "அறிவுறுத்தல் பொறியியல்" என்பது ஒரு கலை வடிவமாகவே கருதப்படுகிறது. டால்-இ 3 முந்தைய மாதிரிகளை விடச் சிறப்பாகச் செயல்பட்டாலும், ஒரு தெளிவான மற்றும் விரிவான அறிவுறுத்தல் முடிவுகளின் தரத்தை வெகுவாக மேம்படுத்துகிறது. ஒரு தரமான அறிவுறுத்தலில் குறைந்தது ஐந்து முதல் ஏழு வரையிலான முக்கியச் சொற்கள் இருக்க வேண்டும் என்று நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். இதில் பொருளின் பெயர், அதன் செயல், பின்னணி, ஒளியமைப்பு மற்றும் கலைப் பாணி (Art Style) ஆகியவை அடங்கும்.

எடுத்துக்காட்டாக, "ஒரு விண்வெளி வீரர்" என்று மட்டும் உள்ளிடுவதற்குப் பதிலாக, "நவீன பிளாஸ்மா கவசத்தை அணிந்துகொண்டு, பால்வீதி பின்னணியில் தெரியும் ஒரு விண்வெளி வீரரின் நெருக்கமான புகைப்படம், யதார்த்தமான வண்ணங்கள் மற்றும் சினிமா ஒளியமைப்புடன்" என்று குறிப்பிடுவது மிகச்சிறந்த முடிவைத் தரும். மேலும், ஒளியமைப்பைக் குறிப்பிட "இயற்கை ஒளி" (Natural light), "நாடக ஒளியமைப்பு" (Dramatic lighting) அல்லது "பின்புற ஒளி" (Backlight) போன்ற சொற்களைப் பயன்படுத்தலாம். கேமரா கோணங்களைக் குறிப்பிட "நெருக்கமான காட்சி" (Close up) அல்லது "பரந்த கோணம்" (Wide angle) போன்ற சொற்கள் ஏஐ-க்குத் தெளிவான வழிகாட்டுதலை வழங்குகின்றன.

அறிவுறுத்தல்களை உருவாக்கும்போது "உருவாக்கு" (Create) அல்லது "வரை" (Draw) போன்ற சொற்களைத் தவிர்த்துவிட்டு நேரடியாகக் காட்சியை விவரிப்பது நல்லது என்று சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனெனில் அத்தகைய சொற்கள் சில நேரங்களில் படத்தில் தேவையில்லாமல் தூரிகைகள் அல்லது வரைதல் கருவிகள் தோன்றுவதற்குக் காரணமாகிவிடுகின்றன. மேலும், ஒரே மாதிரியான பாணியில் பல படங்களை உருவாக்க விரும்பும் பதிவர்கள் அல்லது வடிவமைப்பாளர்கள், ஒரு நிலையான "அறிவுறுத்தல் வார்ப்புருவை" (Prompt Template) பயன்படுத்தலாம். இது அவர்களின் பிராண்ட் அடையாளத்தைப் படங்களின் மூலம் சீராகத் தக்கவைக்க உதவும்.

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்,**
**ஓட்டமாவடி.**

# "திருப்பம்" சிறுகதைத் தொகுதி ரசனை குறிப்பு

*ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன் - கிண்ணியா*

நாம் வாழும் சமூகத்தை நல்ல றிவாலும், நல்ல சிந்தனைகளாலும் செம்மைப்படுத்த கற்றவர்களும், வாசிப்பறிவுள்ளோரும் நிச்சயம் தேவை.

சிறந்த அறிவு சார், சமயசார் நூல்களும், இலக்கியப் படைப்புகளும் வாசிப்புடன் நம்மை தொடர்ந்து பயணிக்கத் துணை நிற்கின்றன.

எழுத்தாளர்களின் உள்ளத்தி லிருந்து எழும் நல்ல சிந்தனைகள், வாழ்வியல் அனுபவங்கள், கனவுகள் அனைத்துமே மொழியுடன் இரண்டறக் கலந்து நல்ல பல இலக்கியங்களைத் தோற்றுவித்து நம்மை வழி நடத்திச் செல்வதோடு, அந்தந்த பிரதேசத்து மக்கள் வாழ்வியலின் பன்முகத் தன் மையையும் வெளிப்படுத்தி விடுகின் றன.

நம் இலங்கைத் தாய் நாட்டி லும் இலக்கியப் பரப்பில், சிறுகதைத் துறையில் விசாலமான பங்களிப்பைச் செய்தவர்கள் பலர்.

அவர்களுள் சாய்ந்த மருது கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன் அவர்களும், தான் வாழும் சமூகம் சார்ந்த விடயங்களை விழிப்புணர்வுக் காக தனது கருத்துக்களை விதைத்து சிந்திக்க வைக்கும் ஒரு மூத்த இலக்கி யவாதியாக காணப்படுகின்றார். இவர் களது நூல்கள் அனைத்துமே மார்க் கத்தோடு இயைந்த வகையிலேயே வலம் வருகின்றன.

அண்மையில் ஸ்ரீலங்கா பென்கிளப் ஐந்தாவது மாநாட்டுக்கு சென்றிருந்த சமயம் இவரது "திருப்பம் சிறுகதை" தொகுதி என் கரம் கிட்டியது.

தான் வாழும் சமூகம் சார்ந்த அனுபவங்களை எழுத்துக்கள் மூல மாக விழிப்புணர்வூட்டும் நூலாசிரியர் பற்றியும் சில வரிகள்...

கடந்த நான்கு தசாப்தங்களாக இலக்கியப் பணியாற்றி வரும் கலாபூ ஷணம் மருதூர் ஜமால்த்தீன் அவர்கள் கிழக்கின் குறிப்பிடத்தக்க முஸ்லிம் ஆளுமைகளுள் ஒருவராகத் திகழ்கின் றார்.

மார்க்கக் கல்வியைத் திறம்ப டக் கற்று மௌலவிப் பட்டம் பெற்ற இவர், நீண்ட காலமாக அல்ஹுதா பத்திரிகை உதவி ஆசிரியராகவும், மருதம், சிபா ஆகிய பத்திரிகைகளின் இணையாசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்.

பல விருதுகளுக்குச் சொந்தக் காரரான இவர் 15 நூல்களை இலக்கி யவுலகுக்கு தந்திருக்கிறார் .

தடயங்கள், வலி சுமந்த தேசம் தீ நிலம், வல்லூரின் வானம், மனிதம் வாழும் போன்றவை அவரது கவிதைத் தொகுதிகளாகவும்...

கிழக்கின் பெரு வெள்ளக் காவியம், கொரோனா குறுங்காவியம் போன்ற காவியங்களும், ரமலான் ஸல வாத், முஹம்மது நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் புகழ் மாலை, இஸ்லாமிய கீதங்கள், பத்ர் யுத்தம் ஸலவாத் மாலை, விண்ணகப் பயணம் ஸலவாத் மாலை, போன்ற ஸலவாத்மாலை நூல்களும், திருப்பம் சிறுகதைத் தொகுதி, அகந்தை அழிந்தது, உருவகக் கதை என்பன இவரது சிந்தையாலும், விரல்களாலும் உருவான இலக்கியப் படைப்புகளாக வெளிவந்திருக்கின்றன. உண்மையிலேயே வியந்துதான் போனேன்.

இனி ”திருப்பம்” சிறுகதைத் தொகுதி பற்றி பார்க்கலாம்.

அழகிய ரம்மியமான கிராமிய சூழல் அட்டைப்படத்தை அலங்கரித்திருக்கின்றது. 92 பக்கங்களில் 19 சிறுகதைகள் இந்த நூலினுள்ளே அடக்கம்.

தஞ்சாவூர் மாவட்டம் சிராஜுல் மில்லத் தமிழ் இலக்கிய பேரவையினரின் அனுசரனையுடன் வெளியீடு செய்யப்பட்டிருக்கின்றது. பாவலர், பன்னூலாசிரியர் தீரன் ஆர் .எம் நௌஷாத் அவர்கள் அணிந்துரை வழங்கி இருக்கிறார்.

அவர் வழங்கிய அணிந் துரையில் “பிறரின் நடை, உடைகளை பின்பற்றாது, தனக்கு தோன்றியபடி தானே நெய்த சட்டைகளை அணிந்து கொண்டு, ஜமால்தீனின் கதைகள் நம்மிடையே உலா வருகின்றன. அவற்றில் பல கதை சொல்லியின் சொந்த வாழ்வியல் அனுபங்களைப் பேசுவனவாய் உள்ளன. சமூகத்தில் இன்றும் வாழும் வர்க்க முரண் பாடுகளை சுட்டுவன. கீழ்த்தட்டு மனிதரின் மனவேக்காடுகளை பேசுவன” என குறிப்பிட்டிருக்கின்றார்.

தொகுப்பின் முதலாவது கதையே இத்தொகுப்பு நூலின் பெயரைக் கொண்டு ஆரம்பமாகிறது.

“திருப்பம்” முழு முஸ்லிம் சமுதாயமுமே சிந்திக்க வேண்டிய அருமையான கதை. எல்லா மஹல்லா பள்ளி வாசல்களிலும் பள்ளியை நிர்வகிக்கும் “முஅத்தின்மார்”களின் நிலமையை வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கின்றது.

முஅத்தின்மார்களை சர்வ சாதாரணமாக, தரக்குறைவாக எடை போடுவதும், ஏதோ எடுபிடி வேலையாட்கள் போல நடாத்துவதும் மிகவும் பரிதாபத்திற்குரிய செயல் என்பதை கதை மூலம் சமூகத்துக்கு எடுத்துச் சொல்லி இருக்கும் விதம் அருமை.

அவர்கள் ஒரு நாளின் பெரும் பொழுதை அல்லாஹ்வின் மாளிகையில் கழிப்பவர்கள். அனைவரையும் படைத்த ரப்பை வணங்குவதற்காக அதான் எனும் அழைப்பை மேற் கொள்பவர்கள். பள்ளியில் கண்டும் காணாதும் வரும் வருமானத்தை வைத்து மிகக் கஷ்டப்பட்டு தன் குடும்பத்தைக் காப்பாற்றுபவர்கள். அவர்களது பொருளாதார கஷ்டங்களிலோ, அல்லது வாழ்வியல் சுமைகளிலோ பங்கெடுத்து உதவி செய்யா விடினும் “அல்லாஹ்வின் ஊழியர்கள்” என்ற வகையில் அவர்களைக் கௌரவமாக நடத்தலாம். என்பதை “திருப்பம்” கதை மூலம் மிக அழகாகச் சொல்லி இருக்கிறார் நம் கதாசிரியர்.

இந்தக் கதையில் அப்படியே மேல் மாகாண கிராமிய பேச்சு மணம் இழையோடி கதைக்கு அழகு சேர்க்கின்றதுடன், நம்மைச் சிந்திக்கவும் வைக்கின்றது. “திக்ர்” என்ற வணக்கத்தில் ஈடுபடுவது போன்று (ஃபிக்ர்)

சிந்தித்தலும் ஒரு வணக்கம் என்கிறது நம் மார்க்கம். சிந்திப்போம்.

அதே போன்று "சேற்றில் ஒரு செந்தாமரை" என்ற கதையும், "முஅத்தின்மார்"களின் குடும்பங்களில் நடக்கும் வாழ்வியல் கோலங்களை சித்தரிக்கின்ற திருப்பமான கதை.

நஸீர் போன்று மார்க்கப் பற்று மிகுந்த தன்னம்பிக்கையான இளைஞர்களால் இப்படியான சமூக மாற்றங்களும் நம் சமூகத்தில் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

"உள்ளம் உறுதி பெற்றால், பிராயச்சித்தம், உம்மாவின் வசியத், இருமுகம், ஓதிக்கொடுத்த தண்ணீர், உயர்ந்தவன், துரோகத்தின் பரிசு, பிடிவாதம் கலைந்தது," போன்ற கதைகள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் நிகழும் விடயங்களை துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

"திருந்திய உள்ளம்" சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் "வட்டி" என்ற ஹராமான விடயத்தைப் பற்றி பேசுவது நமது சமூகத்திற்கான விழிப்புணர்வு. ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சக்கூடிய இந்த வட்டித் தொழில் பற்றி அல்குர்ஆன் கடுமையாக எச்சரிக்கின்றது.

மறுமையில் தாயோடு "ஸினா" செய்தவனாக எழுப்பப்படுவதற்கு எல்லோருமே பயந்து கொள்ள வேண்டும்.

"நேர்மையின் பரிசு, இறை நாட்டம், விவாக விடுதலை," போன்ற கதைகள் மூலம் யதார்த்தச் செறிவுடன், சமூக விழிப்புணர்வு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இக்கதைகளை வாசிக்கும் போது

"அறிவு தாழ்ந்தவனை உயர்த்தும், ஆனால் அறியாமை வலிமையை வீழ்த்தி விடும்" என அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிட்டிருப்பது நினைவுக்கு வருகின்றது .

மனித வாழ்வின் எல்லை மரணம் வரை தானே... என்பது போல இறுதிக் கதைகளான "படிப்பினை", "கலந்தன் காக்கா" இரண்டுமே மரணத்தையும்,... மரண வீடுகளிலும், மையவாடிகளிலும் நிகழும் அறியாமையையும் மிக அழகாகப் பேசுகின்றன.

"கலந்தன் காக்கா" கதை ஒரு படி மேலே கிராமங்களில் நமது இறுதி மண்ணறை வீடான"கப்று" வெட்டு பவர்களின் நிலையை எடுத்துக் காட்டுகின்றது. "உங்களைத் தொழுவிப்பதற்கு முன்னர், நீங்கள் தொழுது கொள்ளுங்கள்." என்ற வாசகம் சில மையவாடி சுற்று மதில்களில் எழுதப்பட்டிருக்கும்.

அதைக் கடந்து செல்கையில், ஒரு வகையான உள்ளச்சத்துடனேயே அந்த நிதர்சன வாசகங்களை நாம் வாசித்துக் கொண்டு செல்வோம்.

ஈற்றில் தொழாமல் கப்றுவெட்டி, காலத்தை ஓட்டும் கலந்தன் காக்காவும் தன்னுணர்வு பெற்று, மனம் மாறுவதோடு நூலும் நிறைவு பெறுகிறது.

கிராமிய வாழ்க்கை முறைகளை... வறுமைக் கோலங்களை நகர்ப்புறத்துக்கும் புகுத்தி விடும் லாவகம் நம் எழுத்தாளரிடம் நிறையவே காணப்படுகிறது.

தன்னைச் சுற்றியும் தான் வாழ்கின்ற சூழலில் தன்னோடு சம்பந்தப்

பட்ட அனுபவங்களுமாக, இலகு மொழிநடையில் எதார்த்தமாக சொல் லப்பட்ட விடயங்கள் அத்தனையும் கதைகளாக அல்லாமல், நம் கிழக்கு கிராமிய சமூகத்தின் வாழ்க்கையா கவே தெரிகின்றது.

இந்தக் கதைகளில் கையாண் டிருக்கும் மொழி வாண்மைக் காகவே இந்தக் கதைகளை திரும்பத் திரும்ப படிக்கலாம் போலுள்ளது.

மனித நேயம் மிகுந்த மார்க்கப் பற்றுடன், சமூக அக்கறை யோடு எழு தும் கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன் அவர்கள் நீண்ட தேகாரோக்கியத்து டன் இன்னும் பல நூல்களை நம் சமூகத்துக்கு வழங்க வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்வோம்.

---

# இறைச்சிக் கஞ்சி காய்ச்சும் முறை



## தேவையானவை:

- இறைச்சி - 250g
- சோறு - 1 கப்
- தண்ணீர் - 4 கப்
- வெங்காய் - 1
- தக்காளி - 2
- இஞ்சி, பூண்டு - 1 டீஸ்பூன்
  கொத்த மல்லி இலை - சிறிது
- உப்பு, மஞ்சள் தூள்,
  மிளகு தூள் - தேவைக்கேற்ப

## செய்முறை:

- இறைச்சியை சுத்தம் செய்து வேக வைக்கவும்.
- வெங்காய், தக்காளி, இஞ்சி, பூண்டு ஆகியவற்றை அரைக்கவும்.
- சோறு, வேக வைத்த இறைச்சி, அரைத்த கலவை, உப்பு, மஞ்சள் தூள், மிளகு தூள் ஆகியவற்றை சேர்த்து காய்ச்சவும். கொத்தமல்லி இலை தூவி பரிமாறவும்.

## மரித்தாள் மீண்டும் உயிர்த்தாள்.

அருணனுக்கு முன் னெழுந்து தினம்,
தருணம் வென்ற திருமகளாய்,
நாளின் பணி தொடங்கும் பாவை,
தாள் பணிவாள் இறையை.

வாசல் பெருக்கி மனை திருத்தி,
நேசன் விழிக்க முன்பே,
அவன் ஆடை அழுத்தி வைக்க,
இவண் விடியுமே காலை.

கணவனுக்குக் காபி தந்தைக்குத் தேநீர்,
இணக்கமாய்த் தாய்க்கும் பிள்ளைகட்கும்,
சுணக்காமல் கொடுத்து தனக்கென்றே,
பிணங்காம லருந்த நேரமில்லை.

கொண்டவன் தோசை கேட்பான் பிள்ளை,
கண்டதைக் கேட்டழுவான்.
தந்தைக்குப் பிட்டும் சொதியு மென்பார்,
விந்தைதான் தாயுமறியாள் இவளை.

பகலுக்குச் சமைத்து வைத்து கணவன்,
நகர்வுக்குப் பொதியும் கட்டி,
பள்ளிக்குப் பிள்ளைகளைப் பாங்காக அனுப்பி,
உள்ளம் பதைக்கும் கடிகாரத்தில்.

தாயைக் கழுவி ஆடை யணிவித்து,
வாயை உணவிற்காய்த் திறக்கையிலே,
தலைக்கவசம் கேட்டு அதட்டுவான்,
விலைபேசா பணியாளர் இவளை.

உண்ணும் ஆசை அக்கணமே அடங்க,
கண்களில் பொங்கும் கங்கையை,
எவரேனு மறியாமல் குனிந்து மறைத்து,
அவதியுட னடைவாள் அலுவலகம்.

கைவிர லடையாள இயந்திரம் முறைக்கும்,
மைவிழி கண்ணீரில் பூக்கும்.
முகாமையாளர் முகத்திலே எள் போட்டால்,
வாகாக வெடிக்கும் சினத்தில்.

மாலை வரை கோப்புகளில் மேய்ந்து,
வேலை முடிந்ததெனத் திரும்ப,
ஆடை மாற்றவும் அவகாசம் தராமல்,
பாடைகட்ட காத்திருப்பர் ஓய்விற்கு.

அந்திச் சிற்றுண்டி இரவுச் சமையல்,
குந்தி யிருக்க இயலாது,
அத்தனை பேர்க்கும் மொத்தப் பணியாளராகி,
நித்தம் தூங்குவதோ நடுநிசி.

தூக்கத்தில் நிம்மதி தேடித் தவிக்கையில்,
ஏக்கத்தில் கிடப்பான் கணவன்.
உணர்வற்ற ஜடமாகி யுள்ளம் சிதறி,
இணக்கமாய்க் கிடப்பாள் வெறித்து.

ஒரு நாள் ஒரு யுகமாய்,
பெருகி முடிந்தாலும் மறுநாள்,
மீண்டும் தொடங்கும் இன்னொரு யுகந்தான்,
மாண்டு எழுந்தவளாய் உயிர்ப்பாள்.



சம்மாந்துறை மஷ்ஹூறா

# மீண்டு எழுவோம்

மழைக்காகக் காத்திருந்தோம்
அது பிழையாகிப் பொழிந்தது
மலைபோல நம்பியிருந்தோம்
அது மண்ணாகிச் சரிந்தது
எதுவெல்லாம் ஏதுவென
இருந்தோமோ
அதுவெல்லாம்
போதும் போதுமெனப்
பொய்யாகிப்போனது

மேடு பள்ளம் சமப்படுத்த
எங்கள் வீடு சரித்த வெள்ளமும்
உயர்வு தாழ்வு ஒருங்கிணைக்க
எங்கள் உடைமை பறித்த
உயர் நிலங்களும்
ஒருவேளை
பிழை சொல்ல முடியாதிருந்திருக்கும்
எத்தனை உயிர்களை
உள்ளே புதைத்து விட்டு
இத்தனை பேரையும் உணர்விழந்து
நடைப்பிணமாய்
நடமாடவிடாதிருப்பின்...

நாம் கடந்து வந்த காலத்தின்
காயத்தழும்புகள் ஆற்ற
காலங்கள் நீளுமென்று
காற்றாகிக் கனமழையாகி
சேறாகிச் சரிகின்ற
மலை இடுக்காகி
அடுத்த கணமே
அழிக்க நினைத்ததுவும்
ஒருவேளை சரியென்று
சார்ந்திருப்போம்
எம்மடிமீது கைவைத்து
அடியோடு சரித்து
இப்படிப் பிணக்காடு செய்யாதிருப்பின்...

இடியோடு மழை வந்தாலும்
பிணக்காகி
இடர்பாடு எதுவந்தாலும்
மனதால் இடிந்து விழும்
மனிதர்களின் மண்ணல்ல இது

நீர்கொண்டு அழித்தாலும்
வேரோடு அழிவதில்லை
மண்சரிந்து
நிலநடுக்கம் எடுத்தாலும்
மனம் சரிந்து நாம் பிரிவதில்லை
கணப்பொழுதில் பிரிந்ததெல்லாம்
இந்தப் பள்ளத்துள்ளும்
இருப்போர் இதயத்தின்
உள்ளுக்குள்ளும்
சொல்லொணாச் சோகங்களாய்
இனி உறங்கி உயிர் வாழும்

கிறங்கிப்போன இதயங்களுக்கு
நல் மருந்தாக நாமிருப்போம்
இடர்பட்டு நிற்கும் உறவின்
இன்னொரு உடன்பிறப்பாய்
இறங்கி வந்து உதவி செய்யவும்
இங்கே நாமிருப்போம்
உங்கள் கருவிழி சிந்தும்
ஒவ்வோர் துளிக்கும்
துடைக்கின்ற விரல்களாகவும்
நாமே இருப்போம்

படைத்தவன்
அவனே எடுத்துக்கொண்டான்
இதை இனி இருப்பவர்
இருதயம் பொறுப்பதற்கு
இன்னொரு
அணியாய்த் துணையிருப்போம்
இங்கு தனியாய் யாருமில்லை
ஒரு கருப்பையில் பிறப்பெடுத்த
உயிர் உறுப்பினராய்
உடன் திரள்வோம்
வருந்தி இங்கு
வலுவிழந்து இருப்பதற்கோ
நிலமிந்த நிலமெங்கள்
சிதைந்து கலங்கி இருப்பதற்கோ
இடமளிக்க விடமாட்டோம்
ஒன்றாய் வடம்பிடித்து
மீண்டு எழ
நன்றாய் நாம் ஒன்றிணைவோம்



**ஷினாஸ் "காகிதம்"அநாமிகா**

## ஒன்ன நெனச்சி நாளும் வாடுறேன்

அத்த பெத்த அத்தானே
அய்த்த மக அழகி நா
ஈரெண்டு வருஷமா
காத்துக்கெடக்குறேனே

கண்ணாம்பூச்சியாட்டம்
கண்ணக் கட்டி விட்டு ஓட்டம்
இந்தக் கிறுக்குப் புள்ள
வாட்டம்
ஊரெல்லாம் பேசுது ஒரு கூட்டம்
அது புரியாதா ஒனக்கு
புள்ளி வைத்துக்
கோலம் போட்டாயே எனக்கு

முற்றுப்புள்ளி வைத்தது போல
கட்டிய தாலி ஈரம் காயாம
பட்டாளக் காட்டுக்குப் போனாயே

இந்தப் பொட்டப்புள்ள
ஒன்ன நெனச்சி நாளும் வாடுறேனே
ஓரிரு மாசமா
ஒன்னோட பேசாம



**பானு ஜிப்ரி**
**சாய்ந்தமருது**



# ஞானப் பற்கள்

Dr. பர்வீன் ஏ காதர்
கல்முனை



ஞானப் பற்கள் என்பது வாயில் உள்ள 3ஆம் கடைவாய்ப் பற்கள் ஆகும். வாயில் 4 ஞானப் பற்கள் காணப்படும். மேல் தாடையின் இறுதிப் பற்கள் இரண்டும் கீழ் தாடையின் இறுதிப் பற்கள் இரண்டும். இவை 17 தொடக்கம் 25 வயது வரை பொதுவாக முளைக்கும். ஆனால் 50 வயதுவரை கூட முளைத்துப் பூரணம் அடையாது இருப்பதும் உண்டு

சாதாரண பற்கள் முளைப்பது போன்றல்லாது ஞானப் பற்கள் முளைக்கும் போது சிரமங்கள் ஏற்படும். பொதுவாக மேல் தாடைப் பற்களை விட கீழ்த்தாடைப் பற்கள் முளைத்து வெளிவருவதில் சிரமங்கள் அதிகம்

இப்பற்கள் முளைக்கும் போது ஏற்படும் அறிகுறிகள்
தாடை பகுதியில் வலி ஏற்படும்.
அந்தத் தாடைப் பகுதியில் வீக்கம் வரும்
பல் முளைக்கும் பகுதி சிவந்து போகும்
அதிக தொற்றுக்கு உள்ளானால் வாய் திறப்பதில் சிரமம் ஏற்படும்
காய்ச்சல் உண்டாகும்

இப்பற்கள் முளைக்க போதியளவு இடம் தாடை எலும்பில் இருப்பின் அது ஒன்று அல்லது இரண்டு வருடத்தில் முளைத்து விடும். ஆனால், முளைப்பதற்கு போதியளவு இடை வெளி தாடை எலும்பில் இல்லாத போது அவை எலும்பிற்குள் அல்லது முரசிற்குள் புதைந்து கிடக்கும். இச்சந்தர்ப்பத்தில் உரிய பற்சிகிச்சை பெற வேண்டும் இவ்வாறான பற்கள் தோன்றும் இடத்தில் பின்வரும் அறிகுறிகள் தென்பட்டால் உரிய சிகிச்சை பெற வேண்டும்.

தொடர்ச்சியான வலி
தொடர்ச்சியான வீக்கம்
வாய் திறப்பதில் கடினம்

அடிக்கடி வலி ஏற்படும் போது பின்வரும் பரிகரிப்புக்களை செய்ய வேண்டும்
வாய்ச் சுகாதாரம் பேணல் (பல் துலக்குதல்) வாய்க்கொப்பளிக்கும் மருந்து பாவித்தல். வலி மாத்திரைகள் எடுத்தல்



# கண்மணி நாயகத்தின் புகழ்.

ரபீயுல் அவ்வலில் உதித்த
முஹம்மத் எனும் பேரொளி
அகிலத்தின் இருளைப் போக்கும்
இனிய வழி
அறத்தின் வழி நிற்கும்
விடியலுக்கான விழி
விபரிக்க இடமில்லை எம்மிடம் மொழி

அல்லாஹ்வின் அற்புதமாய்
அறிவின் மகத்தான பெருமிதமாய்
மெய்யான அருட்கொடையாய்
மேதினிக்கு வந்தீரே
அரேபியா அடைந்த பெருமை
அனைத்துயிர்களினதும் அருமை

தித்திக்கும் திருமறையை
எமக்களிக்கும்
மாநபி மார்க்கம்
தீராத புகழ் பரப்பும்
தீன்வழியதன் நோக்கம்

காவியத் திருமகன்
கறையில்லாப் புது மகன்
சத்தியத்தின் புத்திரன்
நம்பிக்கையின் நாயகன்
குவலயத்தின் கோமகன்
பார்போற்றும் பண்பாளன்
முட்களின் நடுவே மலர்ந்த
மோகன ரோஜா
தன்னடக்க தீனின் மலர்
தாராள எண்ண மலர்
முடிசூடா மன்னரிவர்

பஞ்சமா பாதகங்கள் கண்டு
பரிதவித்த எம் தூதர்
பார்போற்றும் உத்தமர்
பொறுமையின் சிகரமாய்ப்
பொலிவுறும் எங்கள் தூதர்

அல்லாஹ்வின் பேரன்பை
அடைந்திடவே
விரும்பியவர்
முதியோருக்கும் குழந்தைக்கும்
இதயத்தால் அன்பு செய்தார்
அல்லாஹ்வின் புகழுரைத்தார்
பகைவனுக்கும் அருள் செய்த
பண்பு நபி
சிலைகளின் முன்னே
சிரம் தாழ்த்தி நின்றோரைச்
சத்திய வழியில் செலுத்தியவர்

மெய்யான அறங்களை
மேதினிக்கு உரைத்தீரே
ஈகைகளில் ஈடேற்றம்
இருப்பதை உரைத்தீரே
நெய்யாக உருகாதோ நெஞ்சம்
உம்மை நினைக்கையிலே



**றுசைனா ஹாசீம்**
**அக்கரைப்பற்று**

## கடந்த பயணமும் பூக்கும் புது வரவும்



கடந்த பயணங்கள்
எண்ணில் அடங்காது

பூக்கும் புதுவரவில்
புதிதாய்ப் பிறந்திடுவோம்

சென்றுவந்த பாதைகள்
கண்டு சொல்லும்

சுக துக்கங்கள்
எமக்கு ஏராளம்

சோதனைகளும் வேதனைகளும்
கற்றுத்தரும்
பாடங்கள்

ஏமாற்றங்களும்
பலரது வாழ்வில் உண்டு

கற்பதும் கற்றுக் கொள்வதும்
பிரபஞ்சச் சான்று

வெந்து மனம்
நொந்தாலும் ஔடதமும் நாமே!

நிழலில் அருமை
வெயிலில் தெரியும்

கழிந்த காலங்கள்
நெஞ்சின் வலிமையே!

போற்றுவதும் போற்றப்படுவதும்
நம் கையில்

மன மாற்றங்களைத்
தேர்ந்து எடுப்போம்

நடந்தவை நடந்ததாகவே இருக்கட்டும்
வருவதை வரவேற்போம்

நல்லதையே எண்ணுவோம்
நலமுடன் வாழ்வோம்!

**ஏ ஆர் எச் நஸ்மியா. – கிண்ணியா.**

## உணவே மருந்து



நமது உடலில் பல முக்கியமான உறுப்புகளில் சிறுநீரகங்களும் ஒன்று. சிறுநீரகங்கள் இரத்தத்திலிருந்து யூரியாபோன்ற கழிவுகளை வடிகட்டும் வேலையை செய்கின்றன. மேலும் செரிமான அமைப்பிலிருந்து வெளியேறும் கழிவுகளில் உள்ள அதிகப்படியான திரவங்களை வெளியேற்றுகின்றன. சிறுநீரகம், சிறுநீரை உருவாக்குவதற்கும் உடலில் உள்ள இரத்தத்தை சுத்தப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தவகையில், சிறுநீரகங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள உதவும் உணவுகள் என்னென்ன என்பது குறித்து பார்க்கலாம்.

1. சிட்ரஸ் பழங்கள் - இதில் அதிகம் உள்ள வைட்டமின் சி மற்றும் நீர்ச் சத்து நச்சுக்களை திறம்பட வெளியேற்றும். அதுவும் இதில் சிட்ரேட்டுகள் அதிகளவில் இருப்பதால், இது சிறுநீரக கற்கள் உருவாவதைத் தடுக்கும்.

2. வெள்ளரிக்காய் - வெள்ளரிக்காயில் உள்ள டையூரிக் விளைவுகள் சிறுநீரக கற்கள் வருவது தடுக்கப்படுவதோடு, சிறுநீரகங்களின் செயல்பாடும் சிறப்பாக இருக்கும்.

3. செலரி - இது சிறுநீர் பெருக்கியாகச் செயல்பட்டு, சிறுநீர் உற்பத்தியை அதிகரிக்கவும், உடலில் இருந்து நச்சுக்களை வெளியேற்றவும் உதவும்.

4. தண்ணீர் - தினமும் தவறாமல் போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் போது உடல் நீரேற்றத்துடனும் இருக்கும், உடலில் இருந்து நச்சுக்கள் முழுமையாக வெளியேற்றப்படும்.

5. கொழுப்பு மீன்கள் - ஒமேகா-3 கொழுப்பு நிறைந்த உணவுகளை உட்கொள்வது இரத்தத்தில் உள்ள கொழுப்புக்களின் அளவைக் குறைக்கவும், இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும் உதவும். இதனால் சிறு நீரகம் ஆரோக்கியம் மேம்படும்.

**ஜெஸ்மின் யூசுப் – ஹப்புத்தளை**

# பனி மலர்கள்

அவிரியின் சிறுகதை

## ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன் - கிண்ணியா

"வாப்பா என்னால இன்றைக்கு பாடசாலைக்குப் போக முடியல. சரி யான தலைவலி வாப்பா".... எனக் கூறியவாறு வந்து நிற்கும் மகளை யோசனையோடு பார்த்தான் சமீர் .

கொஞ்ச நாட்களாக மகளின் நடவடிக்கை சரி இல்லை. எதையோ பறிகொடுத்தது போல் யோசனையில் ஆழ்ந்து போய் விடுகிறாள்.

ரிதா... என அழைத்தவுடன் பயப்படுகிறாள். பின்னர் சமாளித்துக் கொள்கிறாள். ஆனால் பாடசாலைக் குச் செல்வதைத் தவிர்ப்பதற்காக அவள் சொல்லும் சாக்குப் போக்குத் தான் நம்பும் படியாக இல்லை.

தாய் இல்லாத பிள்ளை வய சுக்கு வந்து ஒரு வருடம் ஆகி விட்டது. நன்றாகத்தான் இருந்தாள். இப்போது கொஞ்ச நாட்களாக அவளது நடவடிக் கைகளில் மாற்றம் தெரிகிறது.

என்னவாக இருக்கும்? என யோசித்தவாறே, பஸ் தரிப்பிடத்தில் கொண்டுபோய் விற்பதற்காக வெட்டிய அன்னாசிப்பழத் துண்டுகளை பேஸ னில் அடுக்கி பொலித்தீன் கவர் கொண்டு மூடிக் கட்டினான் சமீர்.

தகப்பனின் பதிலுக்காக காத்தி ருந்த ரிதா, முதல் நாள் மாலை தயா ரித்து வைத்திருந்த உப்பு, மிளகு சுவையூட்டிப் பாட்டிலையும் எடுத்துக் கொடுத்தாள்.

"சரி...

ஒரு வாரமா பெரியம்மா வீட்டில் இருக்கும் ம்மம்மா வீட்டுக்கு வரும் வரை இப்படித்தான் இருக்கும் எனக் கூறிக் கொண்டு, தங்கை எழுந்தவுடன் இருவரும் சாப்பிடுங்க,.. கவனமாகக் கதவை மூடிக்கொண்டு இருங்க" எனக் கூறிவிட்டுத் தனது வியாபாரத்தைக் கவனிக்க பஸ்தரிப்பிடத்துக்குச் சென் றான் சமீர்.

"என்ன மச்சான் லேட் ஆயிட்டு பஸ் போயிட்டு... அடுத்த பஸ் வரும் வர டீ குடிக்கலாம் வா...." என்று தேநீர்க்கடை வைத்திருக்கும் ராசிக் அழைத்தான்.

"ம்...அதுவும் சரிதான்" எனக் கூறிக்கொண்டு ராசிக் கொடுத்த டீயை மெதுவாகச் சாப்பிட ஆரம்பித்தான் சமீர்.

திடீரெனக் கடைக்கு முன்னே போலீஸ் ஜீப் வந்து நின்றது. அதிலி ருந்து இறங்கி வந்தவனைப் பார்த்த தும் இருவருக்குமே சந்தோஷம். சிறு வயதில் இருந்தே ஒன்றாகப் படித்தவர் கள். அடிக்கடி பார்த்துக் கொள்ளும் நண்பர்கள்தான். கொஞ்ச காலமாக தலைநகர் பக்கம் வேலை பார்த்துக் கொண்டிருந்த அப்துல்லாஹ் சொந்த ஊருக்கே மாற்றலாகி வந்திருக்கிறான்.

மூவரும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்த போது அப்துல் லாஹ் கூறிய விடயம் இருவருக்கும்

பெரிய அதிர்ச்சியாக இருக்கவில்லை. நல்லது நடந்தால் நன்மைதான். இருந்தாலும் இனி இதற்கு ஒரு முடிவு பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் தங்க ளது வேலைகளைக் கவனிக்க தொடங்கி விட்டனர்.

கதவை இறுக மூடிவிட்டு, தூங் கும் தங்கையைப் பார்க்கிறாள் ரிதா.

தங்கையோ மறுபக்கம் திரும்பி நன் றாக தூங்குகின்றாள்.

மெதுவாகப் புத்தகப் பையை தூக்குகிறாள் ரிதா. பாடசாலை செல் லாதது அவளுக்கு மிகவும் கவலை யாக இருந்தது.

ஆனால் பாடசாலைக்கு செல்ல மிகவும் பயமாகவும் இருந்தது. ஒரு வாரத்துக்கு மேலாக பாடசாலையிலும் படிப்பில் கவனம் செலுத்த முடிய வில்லை. பாடசாலைக்கு மட்டுமல்ல.. வெளியில் செல்லவே பயமாக இருந் தது. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தாள்.

வீட்டிலும் அவளால் சாதாரண மாக இருக்க முடியவில்லை. ஆனால் இப்படி அடிக்கடி பாடசாலை செல்லாத தால் படிப்பு?... புத்தப்பையை இறுக அணைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுகின்றாள்.

அந்தச் சம்பவத்தை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. தாயாரின் மரணத்துக்கு பிறகு யாரிடமும் மனம் விட்டுபா பேசவும் முடியவில்லை. பதின் மப் பருவத்தில் இருக்கும் ரிதாவுக்கு உடலில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பருவ மாற்றங்களே பெரும் பயத்தை தந்து கொண்டிருந்த வேளையில், அந்த சம்பவத்தால் மேலும் வெளியில் செல்லவே மிகவும் பயமாக இருந்தது. பாடத்தில் மட்டுமல்ல எதிலுமே கவ னம் செலுத்தவும் முடியாமல் சோர்ந்து தான் போய்விட்டாள் ரிதா.

தாயைப் பிரிந்ததிலிருந்து மன தில் படும் விடயங்களைத் தாயோடு பேசுவது போல் ஒரு அப்பியாசக் கொப் பியில் எழுதி வருவது அவளது வழக் கம். சிறுவயதில் இருந்தே இது ரிதா வின் தாயாரினால் பழக்கப்படுத்தப்பட்ட ஒரு விடயம். இன்றும் அதைத் தொடர்ந்து கொண்டிருக்கிறாள்.

பாடசாலைப் பையைப் பிரித்து அப்பியாசக் கொப்பியை எடுத்து மன தில் உள்ள வலிகள் எல்லாம் எழுதத் தொடங்குகின்றாள். கண்ணீர் ஆறாக பெருக்கெடுத்து ஓட... எழுதி முடித்து விட்டு, இரவும் சரியாகச் சாப்பிடாத பசிக்களையோடு அப்படியே தூங்கிப் போய் விட்டாள்.

மாமியார் வரும் வரை சமை யல் தனது பொறுப்பு. ரிதாவும் வீட்டில் இருப்பதால் சமைத்துவிட்டு வரலாம் என வீட்டுக்கு வந்த சமீர், கதவு மூடி இருந்ததால் தன்னிடம் உள்ள சாவி யால் கதவைத் திறந்து உள்ளே வந்தான்.

விழித்திருந்த சின்ன மகள் பக்கத்தில் வைத்திருந்த பிஸ்கட்டை சாப்பிட்டு பொம்மையுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். தந்தையைக் கண்ட தும் ஓடி வந்து கட்டிப்பிடித்துக் கொண்ட சின்ன மகளை அணைத்த வாறே ரிதாவை பார்த்தான் சமீர்.

அப்படியே தாயாரை உரித்து வைத்து பிறந்திருக்கிறாள்... என நினைத்துப் பெருமூச்சு விட்டவாறே மற்றொரு கையால் தூங்கும் மகளை

சரி செய்தான்.

கையில் இறுகப் பிடித்திருந்த அப்பியாசக் கொப்பி கண்ணில் படவே மெதுவாக மகளின் கையைப் பிரித்துக் கொப்பியை எடுத்து வாசித்துப் பார்த் தான். அவனால் தாங்க முடியவில்லை. அப்படியே கண்கள் இரண்டும் சிவந்து, பற்களை நற, நற வெனக் கடித்து தன்னை ஆசுவாசப் படுத்திக் கொள் ளவே மிகவும் சிரமப்பட்டான் சமீர்.

ரிதாவின் தலையை அன்போடு தடவிக் கொடுத்தவாறே சிறிது நேரம் சிந்தித்தான். அலைபேசியை எடுத்து யாருடனோ பேசினான். பின்னர் பிள் ளைகளுக்கான மதிய உணவைத் தயாரித்துவிட்டு ரிதாவையும் எழுப்பி, பிள்ளைகள் இருவருக்கும் அன்போடு ஊட்டி விட்டான்.

“மாலை ம்மம்மா வந்து விடு வாங்க.... நான் இன்று வீடு வர கொஞ் சம் தாமதம் ஆகும்”.

“இரவுக்கு ம்மம்மா தரும் உண வைச் சாப்பிட்டுவிட்டு இருவரும் தூங் குங்க ”... என்றவாறே தானும் சிறிது பசியாறி விட்டு, தனது மாமியார் வந்ததும் வியாபாரத்தைக் கவனிக்கச் சென்று விட்டான் சமீர்.

மகள் வபாத்தானதிலிருந்து இரண்டு பெண் பிள்ளைகளையும் வளர்க்க, மருமகன் படும் வேதனையை பார்த்து, பிள்ளைகளுக்காகவாவது இன்னொரு துணையைத் தேடிக் கொள் ளச் சொன்னாலும்,

எனக்கு பிடிக்காத விஷயத்தை இன்னொரு முறை பேச வேண்டாம்” என அழுத்தமாக மருமகன் கூறி விட்ட படியால் மேற்கொண்டு எதுவுமே பேச முடியாமல் மௌனித்து விட்டார் ரிதா வின் ம்மம்மா.

அல்லாஹு அக்பர்... அல் லாஹு அக்பர்... மஹ்ரிப் தொழுகைக் கான அதான் ஒலித்தது.

மூவரும் திட்டமிட்டபடியே பள்ளியில் மஹ்ரிப் தொழுதுவிட்டு ஊரை விட்டு சற்றுத் தள்ளி இருந்த அந்த வீட்டை நோட்டமிட்டனர்.

ரிதாவின் நண்பி சஹ்னாவின் வீட்டைத்தான் அவர்கள் நோட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

முடிக்கப்படாத மொட்டை மாடி யில் இருந்து ஒரு விதமான வாசனையு டன் புகை வந்து கொண்டிருந்தது. அப்துல்லாஹ்வும், மப்டியில் அழைத்து வந்திருந்த போலீசாரும் உள்ளே நுழைந்து மடிக்கப்பட்ட போதை வஸ்து பொட்டலங்களுடன், நான்கு இளம் வாலிபர்களைக் கைது செய்து இழுத்து வந்தனர். அத்தனை பேருமே போதையில் இருந்தனர்.

வீட்டில் உள்ளே நுழைந்த சமீரின் கண்கள் சஹ்னாவின் சகோ தரனைத் தேடின. அவன் தங்கையுடன் ஏதோ முரண்பட்டுக் கொண்டிருந்தான். அவள் அழுது கொண்டே மறுத்துக் கொண்டிருந்தாள்.

தனது நண்பியின் தந்தையான சமீரைக் கண்டவுடன் ஓடி வந்து கட் டிப்பிடித்துக் கொண்டு தேம்பியழ ஆரம் பித்தாள்.

ஒரு கையால் சஹ்னாவை அணைத்துக்கொண்ட சமீர்... ஆத்திரம் தீரும் மட்டும் அவனை அடி... அடி என்று அடித்து, ஆத்திரம் தீரும் மட்டும் உதைத்துத் தள்ளினான்.

“விடு மச்சான் செத்துதா தொலைத்திடப் போறான்....” என அவனையும் கைது செய்தான் அப்துல்லாஹ்.

கணவனைப் பிரிந்து வாழும் சஹானாவின் தாயார்... வயதான தாயாரின் பொறுப்பில் இரு பிள்ளைகளையும் விட்டுவிட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாடு சென்று மகனுக்கு பணம் அனுப்பினார். இங்கு மகனும் கெட்ட சகவாசம்.... பணம் தாராளமாக கையில் இருப்பதால் போதைவஸ்துப் பாவனை... விற்பனை.

அடிக்கடி துணைக்கு இருக்கும் ம்மம்மாவை ஏதாவது காரணத்தை உருவாக்கி ஏதாவது கதை சொல்லி, மற்ற உறவுகளுக்குள் அனுப்பி விடுவான்.

போதையில் அவனின் நண்பர்கள் சஹானாவைப் பாலியல் கொடுமைகள் செய்வதைக் கூட அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அல்லது அவனின் சந்தோசத்திற்காகப் புரிந்தும் புரியாமலும் நடித்தான்.

சஹானா முரண்பட்டு அழும் போது அடித்துத் துன்புறுத்தினார்கள்.

“வெளியில் சொன்னால் கொன்று விடுவோம்” என மிரட்டினார்கள். யாரிடம் கூற முடியாத சஹானா, தனது பள்ளித் தோழி ரிதாவிடம், பாடசாலையில் வைத்து ஒதுக்குப்புறமான இடத்துக்கு கூட்டி போய் உடலில் அடிபட்ட காயங்கள், சிகரெட் சூடுகள் போன்ற தழும்புகளை காட்டி அழுத போது ரிதா மிகவும் பயந்து போய் விட்டாள்.

“எங்கே... தனது தோழிக்கு நடந்த கொடுமை, தாய் இல்லாத தனக்கும் நடந்து விடுமோ...” என அந்த பிஞ்சு உள்ளம் பதறியதன் விளைவுதான் ரிதாவின் பயத்திற்கான காரணம்.

“கேஸ் பைல் பண்ணும் போது, இந்தப் பிள்ளையின் பெயர் வெளியே தெரியாமல் பார்த்துக்கோ மச்சான்.

“வளரும் பருவத்தில் பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பும் தாய் அன்பும் கிடைக்காமல் இப்படி எத்தனை பனி மலர்கள் கருகிப் போய் விடுகின்றன”.

“உண்மையிலேயே இது நம்ம சமூகத்திற்கான சாபக்கேடு தான்”. என்று கவலைப்பட்ட சமீர்..

“வாம்மா....

உங்க ம்மா வரும்வரை நீயும் ரிதாகூட எங்க வீட்டிலிந்தே பாடசாலைக்குப் போ”... என சஹானாவைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான் சமீர்.

# போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்



ஜெனிதா மோகன் - நற்பிட்டிமுனை

போதைப்பொருள் என்பது இரசாயனம் ஆகும். இவை இயற்கை யாகவும் செயற்கையாகவும் அரைவாசி இயற்கை அரைவாசி செயற்கை என்ற வகையில் காணப்படுகின்றன. இதனால் உடலியல் பாதிப்புகள், உளப் பிரச் சினைகள், பொருளாதார பாதிப்புகள், சமூக அநீதிகள் மற்றும் வாழ்வில் சந்தோஷம் மட்டுப்படல் போன்றன இடம்பெறுகின்றன.

இலங்கையில் ஒரு வருடத்தில் சிகரெட் பாவனையால் 20,000 பேர் உயிரிழப்பதுடன் மதுசாரப் பாவனை யால் 18,000 பேர் உயிரிழக்கின்ற மையை சுகாதார அமைச்சும் உலக சுகாதாரத் தாபனத்தின் 2018 ஆம் ஆண்டு ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள் ளது. ஹெரோயின் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பாவனையால் 2000 பேர் உயிரிழக்கின் றனர். 40,000 பேரின் உயிர்களைக் காவு கொள்கின்றன. இவ்வாறான மரணங்களால் ஒவ்வொரு வருடமும் சுமார் 35000 பெண்கள் விதவைகளா கின்றனர். சுமார் 60,000 பிள்ளைகள் தந்தையை இழக்கின்றனர்.

போதைப்பொருள் பாவனை யின் முக்கிய பிரச்சனைகளை நாம் அறிவோம். இந்நிலைமையால் உடல், உள ரீதியாக மற்றும் பாலியல் ரீதியா கவும் பல பாதிப்புகளை எதிர் கொள்கின்றனர்.

எமது பகுதிகளில் பெண்கள் போதைப்பொருள் பாவனை செய்வது மிகவும் குறைவு என்றாலும் அவற்றின் பாவனையின் தாக்கங்களை அதிக மாக அனுபவிக்கின்றனர்.

இது இன்றைய காலகட்டத்தில் ஒரு சமூகப் பிரச்சினையாக உரு வெடுத்துள்ளமையை அறியலாம். குறிப்பாக சமூக, பொருளாதார, சுகா தார ரீதியாக பல தீமையான விளைவு களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள் ளது. வீட்டில் கணவன் போதை பொருள் பாவனை செய்வதால் குடும்ப வருமானத்தில் ஒரு பகுதி போதைப் பொருள் கம்பெனிகளுக்கும் கடத்தல் காரர்களுக்கும் இழுத்துச் செல்லப்படு வதால் தங்களது வீட்டு தேவைகளை உணவு, உடை மற்றும் பிள்ளைகளின் கல்வி ஏனைய தேவைகளுக்குரிய பணம் குறைவடைகின்றது. இந் நிலைமை குடும்பங்களுக்கு மட்டுமில் லாமல் நாட்டின் அபிவிருத்திக்கும் பெரும் பாதிப்பாகும். இலங்கை புகையிலை கம்பெனியின் 85% ஆன பங்குகள் பிரித்தானிய அமெரிக்க புகையிலை கம்பெனிகளுக்குச் சொந்தமானது. போதை பொருள் பாவனைக்குச் செலவாகும் பணத்தில் தங்களுடைய குடும்பத்திலும் கிராமத் திலும் நாட்டிலும் தேவைக் காகச் செலவிடும் பணம் விலக்கப்படுவதா கும். கணவர் சாராயத்தைக் காரணம் காட்டி மேற் கொள்ளும் தொந்தரவுகள்

மற்றும் வன்முறைகள் போன்றவையி னால் அதிகமாக குடும்ப பொறுப்புக ளில் இருந்து விடுபடும் போது அந்த சுமையையும் பெண்களே சுமக்க நேரிடு கிறது. ஆண்மையைக் காட்டுவதற்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் பொறுப் புகளில் இருந்து விடுபடுவதற்கும் ஆண்கள் போதைப்பொருள் பாவனை செய்வதால் பெண்கள் வீடுகளில் தனித்துக் குடும்பங்களின் மொத்த சுமையைச் சுமக்க நேரிடுகிறது.

கணவன் மனைவிக்கு இடையே தொடர்புகள் குறைவடைவது மட்டுமன்றி அவர்களுடைய சிந்தனை கள், எதிர்பார்ப்புகள் மற்றும் தேவை களைப் பற்றிக் கதைப்பதற்கு கூட சந்தர்ப்பம் இல்லாமல் போகின்றது. வீட்டிலும் பொது இடங்களிலும் வன் முறைகளுக்கும் துன்புறுத்தல்களுக் கும் ஆளாகுவது பெண்களே. மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தடுப்புச் செயன் முறைக்கு ஒத்துழைக்கவும் பொறுப்பு வகிக்கவும் பெண்களுக்கு இயலுமை இருக்க வேண்டும்.

பெண்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் துன்புறுத்தல்களுக்கும் வன்முறைகளுக்கும் ஆளாகின்றமை யைக் காணக்கூடியதாக உள்ளது. அதற்கு முக்கிய காரணியாக அமை வது ஆண்களின் மதுசாரப் பாவ னையே ஆகும். இது தொடர்பான பல்வேறு கதைகளை நாம் அவதா னிக்க கூடியதாக உள்ளது.

01. நேற்றிரவு குடித்துவிட்டு எனக்கு அடித்தார்.
2. நேற்று எனக்கு கொஞ்சம் கூடி விட்டது.
3. மனைவிக்கு இரண்டு அடி போட்டன்
4. குடித்துவிட்டு வந்து எனக்கும் பிள்ளைகளுக்கும் தீய வார்த்தைக ளால் திட்டுவார்.
5. குடிச்சி இருக்கும்போது சண்டை பிடித்தாலும் ஏனைய நேரத்தில் என்னு டைய கணவர் மிகவும் நல்லவர்
6. குடித்திருக்கும் நேரத்தில் சத்தம் போடாமல் இருந்தால் அடி வாங்கத் தேவையில்லை போன்ற தவறான கதைகளை எமது சமூகத்தில் தேவை யான அளவு கேட்டிருக்கின்றோம்.

குடிப்பதால் வீட்டு வன்முறைக ளும் பெண்களுக்கு எதிரானவன் முறைகளும் இடம் பெறுகின்றதா? இல்லாவிட்டால் வன்முறை செய்வதற் காகவே என்று குடித்துவிட்டு வருகிறார் களா? எப்படி ஆயினும் பெண்கள் வீட்டிலும் சமூகத்திலும் வன்முறைக்கு ஆளாகுவதும், அவ்வாறே வன் முறைக்கு உள்ளாகும் சந்தர்ப்பங் களில் மதுசாரம் குடித்திருப்பதும் பொது இயல்பாக உள்ளது.

இந்நிலைமை உருவாக கார ணமான விடயங்கள் சிலவற்றை ஆராய்வது அவசியமாகும்.
1. வீட்டில் ஆண் - பெண் என்று வேலைகளை பிரித்துக் கொண்டிருப்ப தும்
2. பெண்ணென்றால் வீட்டு வேலை செய்ய வேண்டும். ஆனென்றால் குடும் பத்துக்கு வருமானம் ஈட்ட வேண்டும். குடும்ப பொறுப்பு ஏற்க வேண்டும். வீட்டுத் தலைவனாக இருக்க வேண்டும். இப்படியான விடயங்களை நாம் கேட்கின்றோம்.

3. இன்னொரு வகையில் கூறினால் பெண் பிள்ளை வெட்கம், பயம் இருத்தல் வேண்டும். ஆண் பிள்ளைக ளின் பயமில்லாத துணிச்சலுடன் எந்த ஒரு பிரச்சினைக்கும் தயங்காமல் இருத்தல் வேண்டும். இவ்வாறு எமது சமூகத்தில் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்திக் காட்ட முற்படும் சில கொள்கைகளால் வன்முறைகள், துன்

புறுத்தல்கள் என்பவை எவ்வளவு தாக்கம் செலுத்துகின்றன. இது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.

ஆண்களின் இயல்புகளாக சமூகத்தில் இப்படியான கருத்துக்கள் உருவாக்கப்பட்டன. அப்படியாயின் உண்மையான ஆண் என்றால் வன்முறையைப் பிரயோகிப்பதற்கு மதுசார பாவனை செய்தல் என்பது சமூக அனுமதியாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது. இது வன்முறைக்குக் காரணமாக அமைகின்றது.

ஆண் என்றால் கொஞ்சம் குடித்தால் என்ன? தன்னுடைய கணவர் அடித்தால் என்ன? போன்ற சமூக எண்ணங்களின் பின்னணியில் இது உருவாக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு இடம்பெறும் தொந்தரவுகள் மற்றும் துன்பங்களுக்கு நேரடி தொடர்பில்லா விட்டாலும் சமூக எண்ணங்கள் மற்றும் நடத்தைகள் மூலம் மதுசார பாவனையின் பின்னர் பெண்களுக்கு வன்முறைகளைச் செய்யும் நபர்களுக்கு வழங்கப்படும் அனுமதி மற்றும் மன்னிப்புக்களால் பிரிக்க முடியாத தொடர்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள் போன்ற சந்தர்ப்பங்களில் பெண்கள் சாராயம் குடிக்காமல் சந்தோசமாக இருப்பதை வெளியே கூறாமல் இருப்பதால் சந்தோசமாக இருக்க சாராயம் தேவை எனும் எண்ணம் மேலும் அதிகரிக்கும். இவ்வாறு சில ஆண்கள் தமது சந்தோசத்தைச் சாராயத்திற்குள் முடக்கி வைத்திருப்பதற்குச் சவால் விடுக்க வேண்டும். அதனைப் பிரித்து ஆராய்ந்து பார்ப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

சந்தோசத்தைப் போலவே கவலைக்குச் சாராயம் குடிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. விம்பங்களை மாற்றுவதற்கு பெண்களாக நீங்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

மேலும் சில பெண்கள் தமது வீடுகளில் இவற்றுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். தெரிந்தோ தெரியாமலோ அவ்வாறான தூண்டுதல்களால் சந்தோசமும் வாழ்க்கையும் மட்டுப்படுத்தப்படும். அதாவது சாராயம் குடிப்பதற்கு வீட்டில் விசேட ஒழுங்கு அமைத்து கொடுத்தல், உறைப்புப் பண்டங்களை சமைத்து வழங்குதல், சாராயத்தின் அசௌகரியத்தை மூடி மறைப்பதற்கு உதவுதல், வீட்டில் சிகரெட் சாம்பல் தட்டு வைத்தல் போன்றன. இச்செறற்பாடுகள் இப்பாவனையைப் பொதுமைப்படுத்துவதாக காணப்படுகின்றன.

ஆண் தானே கொஞ்சம் குடித்தால் பரவாயில்லை, இருந்துவிட்டு வீட்டுக்கு வருபவருக்கு சாராயம் கொஞ்சம் கொடுக்காமல் எப்படி, மகளுடைய நான்காம் சடங்குக்கு சாராயம் கொடுக்காமல் எப்படி, மரண வீட்டுக்கு வருபவர்களுக்கு சிகரெட், பீடி, சுருட்டு கொடுக்காமல் எப்படி, ஆண்மையின் அடையாளமே சாராயம், சிகரெட் பாவனை என மெரு கூட்டுவர். இவ்வாறானவை தெரியாமலேயே சாராயம், சிகரெட் பாவனைக்கு உட்படுத்துவதாக அமையும்.

அவ்வாறான கூற்றுக்களையும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தாமல் இருக்கும் போது தனது எதிர்ப்பைத் தெரிவித்தால் சாராயம், சிகரெட் பாவ

னைக்கு வழங்கப்பட்டுள்ள போலிப் பெறுமதிகள் குறைவடையும்.

ஒருவரின் போதைப் பொருள் பாவனையால் மற்றவர்களுக்கு ஏற் படும் அறிதல் சமூகத்தின் போதைப் பொருள் தடுப்பை மேற்கொள்வதற் கான முக்கியமான காரணமாகும்.

ஒருவருக்கு அருகில் சிகரெட் புகைக்கும் போது அதன் தீங்கு மற்றவர்களுக்கும் ஏற்படும். சிகரெட் என்றால் அல்லது புகையால் ஏற்படும் தொந்தரவுகளை கவலையுடன் தாங் கிக் கொண்டிருப்பதற்கு மற்றவர்களும் உள்ளாகுவர். போதைப்பொருள் பாவனையாளர்கள் சமூக நடைமுறை கள் மற்றும் சம்பிரதாயங்களின் போது அநாகரீகமாகவும் சமூக விரோதமாக வும் நடந்து கொள்வர்.

இவ்வாறான சமூக நடைமுறைகள் மற் றும் சம்பிரதாயங்கள் குறிப்பாக சமூத் தில் உள்ள மிகவும் பலவீனமானவர் களைப் பாதுகாப்பதற்காகவே இருக் கின்றன. போதைப்பொருள் பாவனையா ளர்கள் வீணான நடத்தைகளை காட்டி மற்றவருடைய சந்தோசத்தை பறிக் கின்றார்கள்.

பெண்களும் பிள்ளைகளும் இலகுவாக இவர்களுக்கு இரையா கிவிடுவர். போதைப்பொருள் பாவ னையால் மற்றவர்களுக்கு அடித்தல், உடல் ரீதியாக துன்புறுத்துதல் போன்றவை அதிகமாகும். கூடுதலாக இவ்வாறான அழுத்தங்களுக்கும் துன் புறுத்தல்களுக்கும் ஆளாகுவர். சாரா யம் குடித்த பின்னர் மனிதர்கள் மிருக குணம் கொண்டு சுய நினைவின்றி அவர்களை அறியாமலேயே மதுசாரத் தின் தாக்கத்தால் இவ்வாறு நடந்து கொள்வதாக சிந்திக்கின்றார்கள். இது தவறு என்பது உறுதிப்படுத்தப்பட்டுள் ளதுடன் இவ்வாறான நடத்தைகளை உன்னிப்பாக கவனிப்பதன் மூலம் அதனை விளங்கிக் கொள்ளலாம். உதாரணமாக மதுசாரப் பாவனையின் பின்னர் தீய வார்த்தைகளைக் கூறிக் கொண்டு அனைவருக்கும் சவால் விட் டுக் கொண்டிருக்கும் நபர் பொலிஸ் உத்தியோகத்தரை கண்டவுடன் அவ ரது நடத்தையில் மாற்றம் ஏற்படும்.

இவ்வாறான உதாரணங்கள் மூலம் மதுசார பாவனையின் பின்னர் சில செயற்பாடுகளை நடத்தைகளை நன்றாக தெரிந்து கொண்டே செய்கி றார்கள் என்பது புலப்படும்.

போதைப் பொருள் கடத்தல் காரர்களின் இலக்காக அமைவது ஒரு கிராமத்தின் 15 தொடக்கம் 25 பேருக்கு போதைப்பொருட்களை பழக் குவதாகும். அவ்வாறு பழக்கப்பட்ட வர்கள் பாவனையின் பின்னர் குற்ற செயல்களிலும் அநாகரிக செயல்களி லும் ஈடுபடுவர். இவர்களின் மூலம் கிரா மத்தில் கிராமத்தவர்களின் நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்களைக் களவாடுதல், கப்பம் வாங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற் கொண்டு இலகுவாக கிராமத்தைச் சூறையாடுவதற்கும் கடத்தல்காரர்க ளுக்கு இயலும். இந் நிலைமையை மாற்றியமைப்பதற்கு சமூகத்தில் உள்ள மத்திய தர வர்க்க வகுப்பினர் உள்ளிட்ட சமூகத் தலைவர்கள் செயற்படாவிட்டால் எதிர்காலத்தில் சமூகத்தில் குற்றச் செயல்களும் அநி யாயங்களும் இடம்பெறும்.

போதைப்பொருள் பாவனையால் ஒரு வருடைய வாழ்வில் சந்தோசம் இல் லாது போகின்றது.

குடித்துவிட்டுக் காட்டும் வீணான நடத்தைகளுக்குச் சுற்றி உள்ளவர்கள் வழங்கும் கை தட்டல்கள் மற்றும் சிரிப்புகள் அவர்களுக்கு கிடைக்கும் உற்சாசம் ஆகும்.

மேலும் இயல்பாகச் சந்தோசம் உள்ள இடங்களிலும் தளர்வான சூழலிலும் பாவனை செய்தல், அவ்வாறு பாவனைக்கு முன்னர் இருந்தே அற்புதமான எதிர்பார்ப்புகள் போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடைய வசனங்கள் மற்றும் சம்பிரதாயங்களில் சந்தோசமாக உணரப்படும். அவ்வாறான சமூக அனுமதிகள் எதிர்பார்ப்புகள் இன்றி போதைப்பொருள் பாவனையை உற்று நோக்கினால், அது கசப்பான, வெறுப்பான, அருவருக்கத்தக்க சந்தோஷத்தை இழக்க செய்யும் செயல் ஆகும்.

ஒவ்வொருவரும் தமது வீட்டிலும் சமூகத்திலும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவ வேண்டும். போதைப் பொருட்களின் இரசனை யான, அற்புதமான, பெறுமதியான விடயமாக காட்டப்படுவதைப் பற்றி கலந்துரையாட வேண்டும். சமூகமட்ட அமைப்புகள் மூலம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் பயனுள்ள தடுப்புச் செயற்பாடுகளை அடையாளம் காணலும் வேண்டும். போதைப் பொருட்களின் கிடைப்பன வைக் குறைத்தல் மற்றும் விளம்பரங் களைத் தடை செய்தல் போன்ற சரியான அரச கொள்கைகளை வகுத்தல் தொடர்பாக மக்களை தெளிவூட்டல் வேண்டும். அத்தோடு அரச உத்தியோர்களுக்குப் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக அழுத்தம் கொடுக்க வேண்டும். துணிச்சலாக இருக்க தலைமைத்துவம் வகித்தல், சவால் களை வென்றெடுத்தல் போன்றன ஆண்மை அல்ல அவை மனிதத்துவ பண்புகளாகும் ஒழுக்கம், பொறுமை பிள்ளைகளைப் பெறாமல் உதவி புரிதல் போன்றன பெண்மையல்ல அவை மனிதத்துவ பண்புகள் ஆகும்.ஆண்மை மற்றும் பெண்மை எனும் பாகுபாடுகளில் இருந்து விடு பட்டு மனிதத்துவத்தை நோக்கிப் பயணிப்பதன் மூலம் போதைப் பொருள் கடத்தக்காரர்களுக்கும் போதைப் பொருள் கம்பெனிகளுக்கும் ஆண்கள், பெண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் இரையாவதைத் தடுக்கலாம்.

எனவே இன்றைய கால கட்டத்தில் கௌரவ ஜனாதிபதி அவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற சட்ட ரீதியான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் போதைப்பொருள் பாவனையை இல்லாது ஒழிப்பதற்கு வழிவகுக்கும் என்பதில் நம்பிக்கை உள்ளது. எனவே அனைவரும் இத்தகைய நடவடிக்கைகளில் தங்களது கடமைகளையும் பொறுப்புகளையும் அர்ப்பணிப்புடன் செய்வதன் ஊடாக எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்ப தோடு எனது நாட்டின் அபிவிருத்திக் கும் பங்களிப்புச் செய்ய முடியும். போதைப்பொருள் பாவனை எமது சமூகத்தை இருள் சூழ்ந்ததாக மாற்றி விடும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை. எனவே நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படு கின்ற நடவடிக்கைகளுக்கு எம்மால் முடிந்தளவு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

# கண்கள் திறந்தன

அவரியின்
சிறுகதை

**திருமலை மர்ளியா.**



"ஹாஸீர்.. ஹாஸீர்.." என தன் பேரனை அழைத்தவளாய் சுலைஹா நெஞ்சை பிடித்துக் கொண்டு இருமிக் கொண்டிருந்தாள். கொஞ்ச நாட்களாக சுலைஹாவை இந்த இருமல் படாத பாடு படுத்திக் கொண்டிருந்தது.

மகனின் இரண்டு பிள்ளைகளில் மூத்தவன் தான் ஹாஸீர், இளையவள் ஸாரா. எட்டும், நான்கும் என்று இவர்களின் வயது. மகனும் அவனது மனைவி லஸ்னாவும் தொழிலுக்காக வெளியே சென்று விடுவார்கள். பிள்ளைகளினது பராமரிப்பும், வீட்டு வேலைகளும், சமையலொழுங்கும் சுலைஹாவின் பொறுப்பில் தான். இவ்வளவு காலமும் எல்லாவற்றையும் ஒழுங்காகத்தான் பார்த்துப் பார்த்து செய்தாள். ஆனால் ஒரு கிழமையாக வாட்டியெடுக்கின்ற உடலசதியால் எதனையும் ஒழுங்காகச் செய்ய முடியாத நிலை.

"என்ன வாப்பும்மா.. கூப்பிட்டீங்களா" என்று கேட்ட வண்ணம் தங்கையோடு விளையாடிக் கொண்டிருந்த ஹாஸீர் சுலைஹாவின் அருகில் வந்தான். தனது பிஞ்சு விரல்களால் வாப்பும்மாவின் தலையை கோதிய வண்ணம் அருகிலமர்ந்தான். வீட்டு வேலைகள் அத்தனையும் செய்து அசதி ஏற்பட்டாலும் பேரனின் அன்பில் அவையெல்

லாம் தூரப் போய்விடும். ஹாஸீருக்கும், அவனது தங்கை ஸாராவிற்கும் பகலுணவை உண்ணச் செய்து அவர்களிருவரையும் தூங்கச் செய்து, இயலாமல் அவர்களோடு தூங்கி விட்டாள் சுலைஹா.

"வீட்டு வேலைகளெல்லாம் அப்படியேயிருக்க தூக்கம் என்ன வேண்டியிருக்கு" என்ற மருமகளின் குரல் கேட்டு திடுக்கிட்டு கண் விழித்த சுலைஹா..

"மேலெல்லாம் ஒரே வலி ஏலாம இருக்கு.. அதுதான் தூக்கம் போயிட்டு" என்று தடுமாற்றத்துடன் எழுந்தாள்.

"வரவர நீங்க சுத்த மோசம்... ஏதாவது சாட்டை சொல்லிக்கொண்டு வேண்டா வெறுப்பாகத்தான் எல்லாவற்றையும் செய்றீங்க" என்று சினந்தவளாக கத்திக் கொண்டிருந்தாள் மருமகள்.

"இல்ல புள்ள என்னால முடியாம இருக்கு" என்று கூறி கண் கலங்கினாள் சுலைஹா.

"இனி சரிவராது அவர் வரட்டும் எங்கேயாவது போங்கள். வீட்டு வேலைக்கு ஒரு ஆளைப் பார்ப்போம்" என்று நெஞ்சில் ஈரமின்றிக் கூறினாள் மருமகள் .

இந்த சத்தத்தில் விழித்துக் கொண்ட ஹாஸீர், வாப்பும்மாவின் காலைப் பிடித்துக் கொண்டு அழுதான். இதனைப் பார்த்த சுலைஹாவிற்கு நெஞ்சோரமாய் ஏதோ செய்தது. மருமகள் விரைந்து வந்து மகனை இழுத்துக் கொண்டு போனாள்.

"என்ன உம்மா பண்றீங்க. வாப்பும்மா பாவம் உம்மா.... நாள் முழுக்க ஓடி ஓடி உழைக்கிறன். நான் பாவமில்லயா?

வாப்பும்மா உழைச்சி முடிச்சிற்றாங்க. உம்மும்மாவ வந்து இங்க இருக்க சொல்லுங்களன்மா.

உனக்கு வரவர வாய் உரத்துட்டுப் போவுது. மாமி நல்லா கெடுத்து வச்சிருக்காங்க..

வாப்பும்மாவ அநாதை ஆசிரமத்துக்கு அனுப்பிருங்க உம்மா.

அதிர்ந்து போனாள் லரீபா.

"ஹாஸீர் நீ என்ன பேசுற. யாரு இதெல்லாம் சொல்லித் தந்தது.."

யாருமில்ல. என்ட கிளாஸ் லைலாட உம்மும்மா அங்க போனதுக்கப்றம்தான் நிம்மதியா ரெஸ்ற்றாயிருக்காங்களாம். வாப்பும்மாவும் அங்க போய் நல்லாயிருக்கட்டும். அவங்கள விடுங்க உம்மா.

"என்ட கன்றுக்குட்டி.. உம்மாவ அப்பிடியெல்லாம் பேசக்கூடாது தங்கம். அல்லாஹ் சுடுவான்.

உம்மாவையும் அல்லாஹ் சுடுவான்தான். உங்கள அப்பிடி வேல வாங்குறாங்க. சுகமில்லாத டைம்ல சரி கொஞ்சமாவது தூங்க விடுறாங்களா? உம்மாவுக்கு மட்டும் போன நோண்டுற வேல இல்லண்டா தூங்குற வேல.

உம்மா பாவம் தங்கம். ஒபீஸ்ல வேல செஞ்சு களைச்சுப் போய் வந்தா அப்டிதானிருப்பாங்க. உங்களுக்குப் புரியாது. உம்மாவ எதுத்துப் பேசப்படா

தங்கம்.

வாப்பாகிட்டயும் சொல்ல மாட்டீங்க. சொல்லவும் உடமாட்டீங்க... வாப்பா வரட்டும்...

மகேன். பொறகு வாப்பம்மா ஒங்களோட பேசமாட்டன்...

மாமி நீங்க புள்ளயயும் கிள்ளி தொட்டிலயும் நல்லா ஆட்டுவீங்க. உங்க மகன் வரட்டும்.

அதான் வந்திட்டனே லரீபா...

வந்து... அது... உங்க மகன் இப்பல்லாம் நல்லா வாயடிக்கப் பழகி ரிக்கான்... உங்கட உம்மாதான் செல் லம் குடுத்துப் பழுதாக்கிரிக்காங்க...

லரீபா... நீங்க மூணுபேர் பேசி னதையும் நான் கேட்டிட்டுதான் நிண் டன். என்ட உம்மாவ உனக்கு வேலக் காரியா கொண்டு வரல லரீபா. அவவும் ஒரு அதிபராயிருந்தவ. தொழில் செய்ற பெண்கள்ட வீட்டு நிர்வாகம் எவ்வளவு சிரமமெண்டு தெரிஞ்சவ. உன்ன இப் பிடி மட்டமானவளா நான் நினைக்கவே இல்ல லரீபா...!

இல்லங்க.. வந்து...

உம்மா.... உங்க வீடு சும்மா தானே கெடக்கு.நான் சுத்தம் செஞ்சி வெய்க்கன். அங்க போய் இருங்க...

மகன்... என்ட பேரப்புள்ளயள... அவங்க உங்களோடதான் இருப்பாங் கம்மா. நாங்க வேல முடிஞ்சி வர ஐந்த ரையாகுது. வந்து ரெடியாயிட்டு ஆறரை ஏழுக்குள்ள வந்து நான் புள்ளயள ஏத்திக்கிறன்.

அதுக்கில்ல மகன்....

இல்லம்மா இவளுக்கு வீட்டு வேல என்டா என்னண்டு தெரியணும். றாபியா சாச்சி ஒண்ட இடமுமில்லாம அத்தலைறா. உங்களோட வந்து இருந்து வீட்டு வேலகள கவனிச்சிட்டு உங்களயும் பார்த்துக்கட்டும்... நீங்க ஓய்வாயிருங்க. பக்கத்திலதானம்மா. கூப்பிட்ட குரலுக்கு ஓடியருவன்.

உம் பொண்டாட்டி நல்லவதான் மகன்.ஏதோ வேல டென்ஷன்ல பேசிட்டா. கொஞ்சம் யோசிங்க மகன். வீண் செலவும்...

யோசிக்க எதுவுமில்லம்மா. உங்க பென்ஷனே தாராளம். உங்க வருமானத்த யாரும் இனி ஆளத் தேவல. என்னிலயும் தவறிருக்கும்மா. நான் கவனிச்சிருக்கணும். உங்க உழைப்பு என் கண்ணிலயும் படல் லியே... நான் முட்டாள்மா... நான் முடிவெடுத்தா எடுத்ததுதான்.

தீர்மானமாக சொல்லிவிட்டு குளியலறைக்குள் நுழைகிறான் மகன்.

# ஐந்தாவது மாநாட்டு நினைவலைகள் – 2025.10.18
# (காத்தான்குடி மெரேன் மஹால் மண்டபம்)



ஸ்ரீ லங்கா பெண் கிளைப் நிர்வாகக் குழு – 2025

